உ

சிவமயம்.

திருசிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஆ பிப்ரவரிமீ [பகுதி உ.

## ஐதரேயோபநிஷத்து.

கண்டம் மூன்று (தொடர்ச்சி.)

கஉ. உச்சியினைப்பிளந்து அவர் விதிருதி (பிளப்பு) வாயிலாகப் பிரவேசித்தனர். இது ஆனந்தமயதுவாரம். இத்துவாரத்திற்புகுந்த இவருக்கு ஜாக்கிரம், சுவப்னம், சுழுத்தியென முறையேயிடம் கண், மனது, இருதயம் என மூன்றிடமுண்டு.

கங. இங்ஙனமுதித்த ஜீவன் நாமே எல்லாமென அபிமான முற்றும் பின்னர்த்தெளிந்து தன்னிடத்திற்றானே புருஷனைப்பார்க்கிறான்.

கச. ஆகவினிப்புருஷனுக்கு இதந்திரனெனப் பரோட்சமாகச் சொல்லுவர்.

இரண்டாமத்தியாயம் கண்டம்-க.

இச்சீவன் பிரதமத்தில் புருஷனிடம் கர்ப்பமாயிருக்கிறான். அன்னமயமான கோசத்தில் சகலவங்கங்களின் சாரமான ரேதஸ்ரூபமாகிற ஆத்மாவைத்தன்னிடம் பிதாதாங்குகிறான். அந்த ரேதஸ் ஸ்திரீயின் ஸம்யோகக்காலத்தில் வெளிவரும்போது அப்போது அச்சீவனுக்குமுதல் ஜென்மம்.

உ. அந்த ரேதஸானது அந்த ஸ்திரீயினையே சார்ந்துவிடுகிறது. அக்கர்ப்பம் இவனைப்பாதிப்பதில்லை. இக்கர்ப்பத்தினை அவள் காக்கின்றாள்.

௩. ஸ்திரீயானவள் கர்ப்பத்தைக் காப்பாற்றிவரப் பத்தாவது மாதத்தில் புத்திரன் ஜனிக்கின்றான். பிதாவே புத்திரரூபம். அப்புத்திரனுக்குப் பிதா சமஸ்காரஞ்செய்து தானாகப்பாவிக்கின்றான் அங்ஙனஞ்செய்தல் உலகவிருத்தினைய நாடியாம். இது இரண்டாவது ஜன்மம்.

௪. இப்புத்திரன் பிதாவிற்குப்புண்ணியகர்மங்களை நிறைவேற்றப் பிரதிநிதியாகிறான். அப்போது பிதாவாகிய ஆத்மா கிருதகிருத்தியனாய் வயோதிகம்பெற்று இறக்கின்றான். பின்வேறு ஜென்மம் மூன்றாவதாக வடைகிறான்.

ரு. கர்ப்பவாசமாகவிருந்து அக்னியாதி தேவர்களின் சகல சன்மங்களையுமறிந்தனன். இரும்பு விலங்கிட்டுக் கிடந்த பல சரீரங்கள் முன்னர்க்காக்கப்பட்டன. இப்போது சேனமெனும் பறவைபோன்று தத்துவஞானத்தால் புறப்போந்தேன் எனக் கர்ப்பத்திலிருந்தே வாமதேவ முனிவர் முன்னினர்.

மூன்றாவது அத்தியாயம் கண்டம்-உ.

ஆத்துமாவென்றுஎவரைச்சாட்சாத்தாக உபாசிக்கவேண்டுமோ? அவரியாவர்? இருவர்கட்குள் எவராத்மா? எதனாலுருவத்தைக் காண்கின்றானோ? எதனாற் சத்தத்தைக் கேட்கின்றானோ? எதனால் வாசனையை முகருகின்றானோ? எதனால் வசனங்களைப் பேசுகின்றானோ? எது நலம் எது தீமை என்றறிகின்றானோ அஃதியாது?

உ. எஃதிருதயமோ? எதுமனதோ? அவையிரண்டாம், அவற்றின் பிரஞ்ஞான விருத்தியாவன— ஸமஞானம் (சேதனபாவம்), ஆக்ஞானம் (ஈஸ்வரபாவம்), விஞ்ஞானம் (இலௌகிகஞானம்), பரஞானம் (பேரறிவு), மேதா (மறவாமை), திருஷ்டி (நோக்கு), திருதி (தைரியம்), மதி (நினைவு), மனீஷா (நிச்சயம்) ஜூதி (மனத்துன்பம்) ஸ்மிருதி (நினைவு) ஸங்கல்பம் (ஏற்பாடு), க்ருது (தீர்வை), அஸு (ஜீவ விருத்தி), காமம் (இச்சை), வசம் (மாதராவல்),

௩. இவரிந்திரன், பிரஜாபதி, தேவர்கள், பஞ்சபூதங்கள், சர்ப்பாதிகள், பீஜங்கள், அண்டஜந்துக்கள், கர்ப்பஜந்துக்கள், சுவேதஜந்துக்கள், விருட்சங்கள், அசுவங்கள், பசுக்கள், புருஷர்கள், கஜங்கள்,

பட்சிகள், ஸ்தாவரங்கள், எல்லாம் பிரமம்,* யாவும் பிரஜ்ஞாநேத்திரம் யாவும் பிரஜ்ஞானத்திலிருப்பன, உலகமே பிரஜ்ஞானநேத்திரம், பிரஜ்ஞையே பிரதிஷ்டை பிரஜ்ஞானமே பிரமம்.†

௪. முன்னர் கூறிய வாமதேவ முனிவரும், பிரமவித்துக்களும் இந்தப் பிரஜ்ஞாத்மாவை யறிவதால் இவ்வுலக நீங்கிச் சுவர்க்க முற்றுச் சகலமுமனுபவித்து அமுர்தராகிறார்கள்.

---

*எல்லாம் பிரமமென்றது அகண்ட வியாபகமான பிரமம். கண்டப்பொருளாமெவற்றினும் அவ்வப்பொருளளவாகவும் கூடிஆதார அந்தரவத்துவாக நிற்றலினாலென்க. "ஐததாத்ம்ய மிதக்ஸர்வம்" அந்த இந்தச் சத்தான ஆன்மாவையுடையதே இந்த (உலகு) எல்லாம் எனும் சாந்தோக்யோப நிஷத்திற் காண்க. அன்றியும் பிரமத்தைவிட்டு நீங்காப் பொருளனைத்தும் பாசம்பசுவினிரண்டிலடக்கும். அவை ப்பிரமமாகிய பதிக்குதேயு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் சீவான்மாவெனும் அஷ்டமூர்த்தங்களாயிருத்தலின் அப்பிரமத்தை எப்பொருளாக் கொள்ளினும் கொள்ளலாம் "ஆத்மாதஸ்யாஷ்டமீ மூர்த்தி-சிவஸ்யபரமாத்மந" ஆன்மாவானது சிவமாகிய பரமான்மாவினது எட்டாவது மூர்த்தியாகும் எனும் உபப்பிருங்கணமும் கூறிற்று.

†பிரஜ்ஞானம் பிரஹமம். இது மகாவாக்கியங்களிலொன்று. இதன் பொருள். பிரஜ்ஞானம்=பெரியஞானமே சொரூபமாகவுள்ளது. எனவே சிறிய ஞானமுடையது ஜீவான்மாவெனபது சொல்லாமேயமையும், பிரஜ்ஞானமாவது சத்தி "சத்தியின் வடிவேதென்னிற்றடையிலாஞானமாகும்" எனுந் திராவிடோப நிடதம். இச்சத்தியை யுடையவன் சத்தன். ஆகவே சத்திகுணமும் சத்தன்குணியுமாம். கதிரும் கதிரோனும் போலும், இங்ஙனமாயின் வேதம் பரமான்மாவைப் (பிரமத்தை) நிர்க்குணன் குணாதீதன் என்றதென்னையெனின் அது பிரகிருதிபாற்பட்ட இராஜச தாமச சாத்துவிகங்களுடன் கூடிய சகுணபிரமம் போன்ற தன்றென்பதே தாற்பரியம். பரமான்மா எண்குணமுடையனாதலை "கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான்-றாளைவணங்காத்தலை," என உத்தரவேதமும், "எட்டுவான் குணத்தீசனெம்மான்றனை எனத்"தேவாரமும், "இறையவனை மறையவனை யெண்குணத்தினனை" எனத்திருப்பாட்டும், "தாணுவெண்குணன் சங்கரன்" எனப்பிங்கல நிகண்டும்கூறியவாற்றாலறிக. இவ்வெண்குணங்களும்சிற்குணங்களாம். இவையும் பரமான்மாவிற்கு வேண்டுவதில்லை யென்பாரேல் அப்பரமான்மா ஓரியல்புமில்லாவெறும் பாழாய் முடியுமென்க. மேற்குறித்த சிறியஞானமாகிய அஞ்ஞானத்தையுடைய ஜீவான்மாவின் சத்தியாகிய அறிவைச் சுருக்குகின்ற ஆணவமலமும் அந்த வறிவைக் கன்ம மலவழியே சிற்றறிவாச் செய்து நிற்கின்றமாயாமல முண்டென்பதும் பெறப்படும். இம்மூன்றும் பாசமாம். ஆகவேபிரஜ்ஞானம்பிரமம் என்றமகாவாக்கியத்தில் பதிபசுபாசமாகிய திரிபதார்த்தவுண்மை ஸர்வசம்பிரதிபந்நமாம். மற்றமகாவாக்கியங்களின் உண்மைப் பொருளைச் சித்தாந்தம் தொகுதி-௧. பகுதி-௫. பக்கம்-௭௩-ல் கண்டுகொள்க.

மணவழகு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குருவணக்கம்.

தொடர்ச்சி-பகுதி-க-பக்கம்-ரு.

19-வது ஞானாசிரியராய் இப்போது வீற்றிருப்பவர்களே திருவாவடுதுறை யாதீனமடாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள். ஏனைய ஆதீனங்களும் கைலாயபரம்பரையில் வந்த சந்தான குரு நிலையங்களெனக் கூறப்படினும் சந்தான குரு சுவாமிகள் நால்வரையும் பூஜிக்கு முரிமை திருவாவடுதுறைக்கே உரிமையுடையதாதலால், சந்தான பரம்பரையென்றவளவில் திருவாவடுதுறை யாதீனத்திற்கே சிறப்புரிமையுண்டெனக.

1. "கயிலாயபரம்பரையிற் சிவஞானபோதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மைமெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானபாநுவாகி
குயிலாரும் பொழிற்றிருவாவடுதுறைவாழ்குரு நமச்சிவாயதேவன்
சயிலாதிமரபுடையோன் திருமரபு நீடூழிவாழ்கமாதோ"

2. திருந்துவட கயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவ ஞான போத முணர்நந்தி முதற்சி றந்தே
வருங்குரவர் வெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர்
வழங் கருட்சந்ததி யருணமச்சிவாய தேசிகனும்
இருங்குரவ னளித்தசிவப்பிரகாசதேசிக
னிலங்குமறை வனத்தருகோர் வன்குகையி லுறைநாட்
பொருந்தியவன் திருவடிக்கீழ வனருளேவலினாற்
போந்தருளாவடுதுறைவாழ் நமச்சிவாயனைப் புகழ்வாம்.

3. சிற்றுரையும்பேருரையும் சிவஞானபோதமெனு
தெய்வநூற்குக்
கற்றறிந்தோர்களிகூரக் கருணையினாற் செய்தளித்தான்
கலைகடேர்ந்து
முற்றுணர்வு முதலியவற்றூர் சிவனே யென்றறிஞர்
குழாம்மொழிந்து போற்ற
நற்றுறைசைப் பதிமருவுஞ் சிவஞான யோகியெனு
நாமத்தானே"

இம்முறை வழங்கப்படுவது நவகோடி சித்தபுரமென்னும் திருவாவடுதுறையாதீன சந்தான குருபரம்பரையேயாம். இவ்விடயத்தை மேற்கூறியுள்ள பக்கங்களின் செய்யுளாலுணர்க. இந்த அதிட்டித பெத்தான்மாக்களிடம் உள்ளதுபோல்வதன்று. இறைவன் பெத்தான்மாக்களிடம் அதிட்டித்து நிற்பது

ஆவேசகுரு—பக்குவான்மாக்களை யாட்கொள வேண்டி இறைவன் ஆசிரியாக வந்து மெய்ப்பொருளை விளக்கி ஆட்கொள்ளும் அருள் வடிவம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொள்ளக் கருதித் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தினடியிலே யெழுந்தருளியவர் ஆவேசகுருவே யாவர். இவர் இருவினையொப்பு வந்து மலபரிக முற்றுச்சத்திநிபாதம் பெற்ற ஆன்மாதன்னைப் பற்றி நின்ற பாச நீக்கம் பெற்றவுடன் அயரா அன்பின் அரன்கழல் சேருந்தன்மையைச்சின் முத்திரையா லுணர்த்தியாட் கொள்ளுவ ரென்பர். இதனை நமது கவிச்சக்கர வர்த்திகச்சியப்பமுனிவர் அருளிய.

முமமலம் வேறுபட்டொழிய முத்தியில்
அம்மலர்த்தாணிழ லடங்குமுண்மையை
கைம்மலர்க்காட்சியிற் கதுவநல்கிய
செம்மலையலதுளஞ் சிந்தியாதரோ.

என்னும் செய்யுளாலறியலாம்.

குமாரகுருபரசுவாமிகளும் பண்டாரமும் மணிக்கோவையில்

மீகெழுபரஞ்சுடர் வெளிப்பட்டம்ம
வெம்மனோர் போலவினிதெழுந்தருளிக்
கைம்மாறற்ற கணக்கில் பேரின்ப
மோனவாழ்வளிக்கும் ஞானதேசிகன்

என்றும் அருளியிருக்கின்றதாலறியலாம்.

குருவின் கடமை—அபக்குவர்களைத் தம்மிடத்தன்பும் அவர்களிடத்தருளுங் கொண்டு தள்ளிப்பக்குவர்களுக்கு நிர்வாண தீக்ஷை செய்து திரிபதார்த்தங்களையு முணர்த்தும் ஞானசாத்திரங்களை யுபதேசிக்கக் கடவர். ஞானகுரு நினைத்தலால் பக்குவ வான்மாக்கள் சிவமாகும். மீன் தன்பார்வையால் முட்டையினின்று குஞ்சுகளைத் தோற்றுவித்தல்போல பக்குவ வான்மாக்களைச் சிவனுந்தன்மை

யெய்தச் செய்வது அவாது தன்மையென்பர். இதனை திருவிளையாடல் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில் உள்ள

பார்த்தபார்வையாலிரும் புண்டரீரெனப் பருகுந்
தீர்த்தன்றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
போர்த்த பாசமுந் தம்மையு மறந்து மெய்ப்போத
மூர்த்தியாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்

என்பதால் அறியலாகும்.

குருவின் பெருமை—"ஈசனுக்கிழைத்த குற்றம் தேசிகனெண்ணித் தீர்க்கும், தேசிகற்கிழைத்த குற்றம் குரவனேதீர்ப்பதன்றிப் பேசுவதெவனோ" என்ற பெரியர்வாக்கின்படி கடவுளுக்கு நாமொரு குற்றஞ் செய்தால் அவ்வபராதத்திற் கேற்றபரிகாரஞ் செய்து குருவானவர் தீர்ப்பர். குருவுக்கு அபராதஞ் செய்தால் அவரே தீர்க்கவேண்டுமே தவிரவேறு கதியில்லை. இதனைத் தர்மசாஸ்திரங்களிலொன்றிலுள்ள

ஶிவேருஷ்டேகருஸ்தாதா
குரௌருஷ்டேநகஶ்சந

என்னும் சுலோகமும் வற்புறுத்தும்.

"நான்மறைக்கிழவ நற்றவமுதல்வ
நான்முறைபயின்ற நுண்மைசால்அறிஞ
சொற்சுவைபழுத்த தொகைத்தமிழ்க்கவிஞ
கற்றவர்வியக்குங் காவியப்புலவ
செவிதொறுஞ் செவிதொறுந்தெள்ளமுதூட்டு
கவிஞர்வயினிரப்புங் கல்விப்பிரசங்க
வெள்ளிடத்தோன்று துள்ளத்துணர்த்தவுஞ்
சேய்நிலைநின்றுதிருக் கண்சாத்தவுஞ்
சாயாமும்மலச் சகலரேமுய்ய
வெம்முருக்கொண்டு மெம்மொடுபயின்று
மும்மலக்கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பரமுணர்த்துஞ் சற்குருநாய
பளிங்கினிற்குயின்ற பனிநிலாமுற்றத்து
விளங்கிழைமடந் தையர்விளையாட்டயர்தரச்
கொங்குவார்குழலுங் குவளைவாள்விழியும்
பங்கயமுகமும்பத்தி பாய்ந்தொளிர்தலிற்

சைவலம்படர்ந்து தடங்கய லுகளுஞ்
செய்யபூங்கமலஞ் செழுமலரோடையென்
றுடவர்சிற்சிலர் நாடினர்காணூஉ
வம்மின்வம்மின் மடந்தையர்நீவிர்மற்
றம்மெல்லோர்தி யரைம்பையராதலி
னீர்நிலைநிற்றிரா னீரவர்தங்களுள்
யார்கொல்யார் கொல்விசைமினிசைமினென்
றிரும்பூதெய்தி யிரந்தனரிசைப்ப
மறுமொழிகொடாது குறுநகைமுகிழ்த்தாங்
கையுறவகற்று மணிமதிற்கமலை
நன்னகர்புரக்கு ஞானதேசிக
வரசிலாவண்புகழ் அணிநிலாவெறிக்கு
மாசிலாமணி ஞானசம்பந்த
வென்பொருட்டாயினு மென்பொருட்டன்றிது
நின்பொருட்டொரு பொருணிகழ்த்துவன்கேண்மோ
வறிஞனேம்பிய செறுவொன்றேய்ப்ப
பக்குவநோக்காப்பவர் தொறும்பவந்தொறு
மிருவினைப்போகமு மேற்கொண்டார்த்துபு
மற்றென்னுருக்கொடு முற்றினையாலினித்
தாகமின்றுகலிற் பாகமின் றெனக்கென
வருளாதொழியினு பரிபவமெனக்கே
சேய்முகம்பாராள் சினந்தனளேகினும்
போயெடுத்தாற்றுமத் தாய்மீட்டன்றே
யாதலினெனைப்போ லடிக்கடித்தோன்றலை
யீதியாவின்னரு ளின்னணமெமக்கே
சமையந்தீர்ந்த தனிப்பொருடெரித்தற்
கமையந்தேர்கலை யருளுதியாயினு
மென்னீராண்டைக் கிலக்கமிட்டிருந்த
வண்ணலங்குமாரற் காருயிர்தோற்றக்
கடாவிடையூர்தி பாற்கண்டு
மடாதெனமொழிகுந ரார்கொன்மற்றனையே”

“சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மென் சுந்தரனுஞ்
சிற்கோலவாதவூர்த் தேசிகரும்-முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
யெந்தைபிரானஞ் செழுத்தெங்கே”

என்னும் செய்யுள்களாலும் அறியக்கிடக்கின்றது மற்றுமிவர் பெருமையாவர்க்குந் தெரிந்ததே.

குருவையடையும் வழி:—சமுசார சாகரத்தினின்று தவிக்கும் சீடன் இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துப் பிறவிநோயை நீக்கக் குருவை யடையவேண்டும் "கள்ளக் காதலனிடத் தன்புகலந்து வைத் தொழுகு முள்ளக் காரிகைமடந்தைபோல்" குருநாட்டங் கொண்ட பக்குவ சீடர்கள் எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் அத்தனாகிய குருவையடையுநாள் எதுவோ வென்றேக்க மேலிட்டவராகியே யிருப்பர். அப்படித் தேடும் நன்மாணாக்கர்களை ஆட்கொள்ளுவது இப்பரம குருவின் தன்மை.

குருவைவழிபடு முறை—மாணாக்கன் குருவினிடத்தில் விருப்ப முடையனாய், அவனை அன்புடன்வணங்கி ஆசிரியர் நித்திரை நீங்கி எழுந்திருந்து இன்னது செய்யென்று ஏவுதற்கு முன்னே தானெழுந்திருந்து ஸ்நானம்பண்ணி அனுஷ்டானஞ் செய்து முடித்துக்கொண்டு அவர்முன்னே வந்துநின்று அவரைப் பலமுறை ஸ்தோத்திரஞ் செய்து அவருக்கு வேண்டுந் தொண்டுகளைச் செய்து பாசத்தை நீக்கும் ஆசிரியரைச் சிவபெருமானிவரேயென்று மனதினால் அன்போடு பாவனை செய்யக் கடவன்.

"புரிந்தே குரவனடியிணையும் போற்றிப்
பரிந்தேயவர் துய்ப்பணிந்து"

"ஏவுதன்முன்னே யியற்றிப்பணி யறிந்து
நாவினவின் றவ னுமம்"

"சிந்தனைசெய்க சிவனிவனே யென்றுளத்துட்
பந்தமறுப்பானைப் பரிந்து"

என்னும் சைவசமய நெறிச்செய்யுளா லுணரலாம். மற்றும்,

"அழலினீங் கானணு கானஞ்சி, நிழலினீங்கா நிறைந்த நெஞ்சமோடு, எத்திறத் தாசானுவக்கு மத்திறம், அறத்திற்றிரியாப் படர்ச்சிவழிபாடே, என்ற நன்னூல் சூத்திரத்தாலும் அறியலாம். மேலும் ஞானதீக்ஷையால் உடல்பொருள் ஆவி மூன்றையும் தானஞ் செய்ய வேண்டும். அதாவது முன்செயற்கையாய்த் தன்னுடைமையாய் நின்ற இம்மூன்றனையுந் தனக்கின்றிச் சிவபெருமானுக்கே உடைமையாகச் செய்தலாம். ஆவியாகிய தன்னைத் தானஞ்செய்தலாவது தான் சிவபெருமானுக்குப் பரதந்திரனென்றுணர்ந்து அவனருளல்லது ஒன்றைச் செய்யானாகி நிற்றலேயாம். தானேதனக்குச் சுதந்தர மின்றிச்

சிவபெருமானுக்கே உடைமையாய் வழித் தன்னின் வேறாய உடல் பொருள்கள் தன்னுடைமையாமாறு யாண்டைய தென்க. மறைஞானசம்பந்த சிவாசாரியர்

"பொருளுடலாவியெனு மூன்றும் புதல்வன், குரவன் கொளென்கை குணம்"

என்று மாணாக்கன் தீக்ஷாகாலத்தில் உதகஞ்செய்யு முறைமையை யுணர்த்துகின்றார். இன்னும் இதை யொட்டியே,

"அன்றே யென்றனுவியு முடலும் உடைமை யெல்லாம், குன்றேயனையாய் என்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ"

என்றும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கராயார் கொலோசதுரர்" என்றும்,

"வஞ்சவினைக் கென்கலமா முடலைத் தீவாய் மடுக்கிலென் வரையுருண்டுமாய்ப் பேனல்லேன், நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேனல்லேன் நாதனே யாதுனினதுடைமை யென்றே யஞ்சினேன்"

என்று கூறியுள்ள இன்னோர் வாக்கியங்களா லுணரலாம். மற்றும் சிஷ்யன் ஆசாரியர்களை அவர்களுடைய எதிரில் நிற்றலானும் அவர்களுக்குப் பணிவிடைசெய்தலானும் வணக்கத்தோ டிருத்தலானும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தலானும் அவர்களுடைய உபதேசத்தைக் கடைப்பிடித்தலானும், கௌரவப்படுத்தவேண்டும். ஆசிரியன் நீதியுடனாவது, நீதியில்லாமலாவது ஒருகாரியத்தைச் செய் என்றேவினால் அதைச் சிஷ்யன்சிரமேற்கொண்டு செய்யவேண்டும். இதை

"அய்யனங் கதுகேட்டற னல்லவும்
எய்தினாலது செய்கவென் றேவினால்
மெய்யநின் னுரைவேத மெனக்கொடு
செய்கை யன்றோயறஞ் செய்யுமா றென்றான்"

என்னும் பாவாலறிக.

ஆகையால் எய்துதற்கரிய மானிடஜென்மமெடுத்த நாமொவ்வொருவரும் அடையவேண்டியபேற்றைச் சற்குருவாயிலாகஉணர்ந்து, சிவபெருமான் திருவடிக்கீழ் உய்வோமாக.

துறைசை-நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவோபாசனு மகிமை.

தொகுதி 4. பக்கம் 181. தொடர்ச்சி.

"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனூர்தாம் வருவர் மற்றத்தெய்வங்கள், வேதனைப்படு மிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு, மாதலா னிவையிலா தானறிந் தருள்செய்வனன்றே"

எனச் சிவஞானசித்தியார் திருவிருத்தத்திற்கூறியபடி எவரெவர் எவ்வெவ்வத் தேவரைக்குறித்து வழிபடினும் அவ்வவ்வத் தேவரிடமாக நின்று அவ்வழிபாட்டை யேற்று அவரவர்வேண்டிய பலன்களை அளிக்கவல்ல முதற்கடவுள் சிவபெருமானொருவரே என ஒருதலையாகத் துணியக் கிடந்தன.

இது பற்றியே நமது சிவப்பிரகாசரும் தெய்வசிகாமணி என்றருளினர்.

அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபிரானொருவர்க்கே பிறப்பில்லை என்பதற்கு,

"எல்லார் பிறப்புமிறப்பு மியற்பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தே நஞ்சோணேசரில்லிற், பிறந்தகதையுங் கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதையுங் கேட்டிலேம்"

என, அருணகிரி யந்தாதியானும் உரைக்கிடந்தன.

இத்தன்மைத்தாய முழுமுதற் கடவுளை உபாசித்து மோட்சமடைய முயலவேண்டும். ஒருவன் மோட்சமடைதற்குச் சாதனமாயுள்ளது ஞானம். அந்தஞானம் உண்மை உபதேசத்தான் எய்தற்பாலது. அவ்வுபதேசமோ ஒருகுருவின் றிருவாக்கால் நிகழத்தக்கது, குருவோ அவரவர்பக்குவகாலங்கண்டே எழுந்தருளிவந்து உபதேசஞ் செய்வர்.

ஆதலால் மோட்சமடைய விரும்புகிறவொருவனுக்கு முதற்கண்ணே பக்குவம் உண்டாகவேண்டியது அவசியமாம். அப்பக்குவம் சிவபுண்ணியத்தால் வரவேண்டும். சிவபுண்ணியமாவது சிவபெருமானை நாம் வணங்கும் வணக்கத்தால் வரும் வினை நிகழ்ச்சியாம்,

நாம் வணங்கி முத்தியின்பம் பெரும்பொருட்டே இவ்வுலகில் பலதலங்களைத் தமக்கு வாசஸ்த்தானமாகக்கொண்டு ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றார் ஆலயவழிபாடு எவற்றிலும் சிறந்தமையை,

"என்று கூடுமிப்பருவமென்றியம்பில் யாமிருந்துளவிடந்தொறுமிறைஞ்சி, நன்றிசேர் சிவபுண்ணியம் புரியும் நன்மையாலது நானுகுமென்றறிநீ"

என வாதவூரடிகள் புராணத்தானும் முதல்வனென்றே வழிபடுதலை,

செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமு
மாலயந்தானு மரனெனத் தொழுமே.

எனச் சிவஞான போதத்தானும் தெளியக்கிடந்தன. ஆன்மாக்களுய்தற்குரிய இவ்வுலகில் தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களுடைமையின் சிருட்டியாதிகர்த் திருத்துவ முதலியவற்றை அருள் விளையாட்டினெய்தினர் என்க.

எனவே இனி உயிர்கள் பொருட்டு அவராலே செய்யப்படுகின்ற கிருத்தியங்கள் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என ஐந்து வகைப்படும்.

அறிகருவிகளாகிய இந்திரியங்களைக் கொடுத்தலே சிருட்டி, அறிகருவிக்காதியாகிய மனமுதலிய கரணங்களை நிலைநிறுத்தலே திதி, அறிகருவியை நீக்குதலே சங்காரம், அறிதற்றொழில் நிகழுமிடத்து இன்பதுன்பங்களைக் கொடுத்து அதில் அறியாமையைச் செய்தலே திரோபவம், அறிதற்றொழில் நிகழ்வித்தலே அநுக்கிரகம்.கடவுள் இங்ஙனம் ஐந்தொழிலியற்றல் யாதுக்கெனில், உயிர்களைப்பந்தித்த ஆணவமலம் ஒழிதற்பொருட்டாம், மலநோயைத் தீர்க்குங் கடவுள் ஒரு வைத்தியராவர், மலபந்தத்தால் வருந்தும் உயிர்கள் பிணியாளராவர்.

ஆணவமல பந்தமே பிணியாகும், அப்பிணிக்கு மருந்தாயுள்ளது பிராரத்தகன்மம், அம்மருந்தை வைத்துண்ணும் பாத்திரமாயுள்ளது மாயையினுலாகிய சரீரம், அம்மருந்தை யுண்பித்துப் பிணியைநீக்கும் வைத்தியமே பஞ்சகிருத்தியமா மென்றறிக.

அவர் இங்ஙனஞ்செய்யும் ஐந்தொழிலினுலே மலவலிகுன்றிமடங்கும், அதனுற் புண்ணிய வினைவு மேம்படும். அதனுற் சிவபுண்ணியம் மேலும் அதனுல் இருவினையொப்பு மலபரிபாகங்க ளுள்வாம், அதனுற் சத்திநிபாதம் பிறக்கும், அதற்கேற்பகடவுள் ஆசாரியமூர்த்தியாயெழுந்தருளிச் சமயவிசேட நிருவாணதீட்சைகளைச் செய்து, சரியை, யோகஞானங்களில் நிறுத்திச் சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய, சாயுச்சியங்களாகிய அபரபா முத்திகளைத்தந்து, மலநீக்கமும் சிவப்பேறும் உதவிச் சுத்தாத்துவித முத்திநிலையில் இருத்தி என்றும் அழியாப்பேரின்ப வாழ்வாகிய பரமானந்த வைபவத்தை ஆன்மாக்களுக்கு அளித்தருளுவர்.

ஆனதால் இவ்விதம் எளிதில் அளிக்கவல்ல சித்துகளைப்பெருங் கருணு சமுத்திரமாகிய முழுமுதற்கடவுளை நாம் என்றென்றைக்கும் மறவாது மெய்யன்போடு வழிபட்டு அவர் அருளிச்செய்த வேதசிவாகமவழி யொழுகி அவரது திருவருளைப் பெற்று அவராலே தரப்படுகின்ற திருவடிப் பெரும்பேருகிய முத்திநிலையை எய்துதல் தெள்ளியோர் கடைமையாகும்.

இன்னும்வரும்.

இங்ஙனம்,

S. நடேச தேசிகர்,

கவர்ன்மெண்ட் ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோட்டுச்சேரி

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செல்வம்.

செல்வம்—பொருட்செல்வம், கல்விச்செல்வம், அருட்செல்வம், என முத்திறப்படும். அவற்றுள் பொருட்செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி முதலியனவேயாம். அவை இம்மை யின்பத்திற்கு இன்றியமையாதனவாம். ஆகலான் மானுடராய்ப்பிறந்த யாவரும் அத்தியாவசியம் அவற்றைத் தேடல்வேண்டும். தேடுங்காலத்து அறத்தின்வழி யீட்டில் எண்ணில நன்மையையும் உண்டாக்கும். இக்கருத்துப்பற்றியே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரும்,

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

என்று அருளிச்செய்தார். ஆகலான் அறத்தையும் இன்பத்தையும் விரும்பிய நாம் எல்லோரும் தரும வழியாலேயே அப்பொருளைத் தேடல்வேண்டும் என்பது சித்தித்தவாறு கண்டுகொள்க. நம்மனோருள்ளும் இவ்வுலக வின்பத்தைப் பெரும்பாலும் வேண்டிநிற்கும் இல்லறத்தார்க்கேயன்றி மறுமையின்பம் வேண்டிநிற்கும் துறவறத்தார்க்கும் அதுவேண்டும் என்னும் கருத்தால், மாணிக்கவாசக சுவாமிகள் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்றும், "வறியார் இருமையறியார்" என்றும் திருக்கோவையாருள் அருளிச்செய்திருக்கிறார். அங்ஙனமாயின் இப்பொருட்செல்வத்தின் பெருமையென்னுலியம்பலாம் தகைத்தன்று. இச்செல்வமிலார்க்குப் பலவகையினும் இடையூறும் துன்பமும் விளையுமென்பது பிரதியக்ஷம். அதிமதியுடையனேயாயினும் செல்வமிலனேல் அவன்வாக்கை மனைவி மைந்தர் முதலாயினோரும் ஏற்றுக்கொள்ளார். செல்வம் ஒன்றுமாத்திரம் உளனேல் அவன் இழிகுலனாயினும் அறிவிலனாயினும் எல்லோரும் ஏற்று நன்குமதிப்பர். அக்கருத்தினாலேதான் திருவள்ளுவநாயனாரும், ஔவையும்,

இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு—எனவும்

கல்லானே யானாலும் கைப்பொரு ளொன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கெதிர் கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன் வாயிற்சொல்—எனவும்,

அருளிச் செய்தார்கள். சமணமதத்தவராகிய திருத்தக்கதேவரும் இவர்கள் கருத்தைப் பின்பற்றியே,

பொன்னினாகும் பொருபடையப்படை
தன்னினாகுந் தரணிதரணியிற்
பின்னையாகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங்காலை துன்னாதனவில்லையே—எனவும்,

வென்றியாக்கலும் மேதகவாக்கலும்
குன்றினார்களைக் குன்றெனவாக்கலும்
அன்றியும் கல்வியோடழகதாக்கலும்
பொன்துஞ் சாகத்தினாய் பொருள்செய்யுமே.—எனவும்

அருளிச்செய்தார்.இத்தகையசெல்வத்தைஎத்தகையிடையூறுவரினும் பொருட்படுத்தாது "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்பதற்கு இணங்க பெருமுயற்சி செய்து தீவினைவிட்டு ஈட்டி இம்மையின்பத்திற்கும் மறுமையின்பத்திற்கும் ஏதுவாகிய அறங்களைச் செய்துய்வோமாக. அங்ஙனம் செய்யாது,

"பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரேயனுபவிப்பார்
பாவிகாள் அந்தப்பணம்—என்பதற்கு இலக்கியமாய் வாளா

ஈட்டி வைத்து இறந்து படுவோமாயின் நம்மினும் அறிவிலிகளாகிய ழ்மக்கள் வேறியார்? இக்கருத்தினாலன்றோ பட்டினத்தடிகளும்,

பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும்போது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கு மிச்செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்கறியா
திறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் இறைவாகச்சியேகம்
[பனே—எனவும்

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டையாடி நயம்புரியும்
தாயார் வயற்றில் நராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங்குளமும் கல்லாவு மென்ன
வீயாமனிதரையேன் படைத்தாய்இறைவாகச்சியே கம்பனே.

எனவும், அருளிச்செய்தார்.

ஆகலான் பாவத்திற்கஞ்சி பொருளைச் சம்பாதித்து இல்லற தருமங்களை லோபமின்றி அப்பொருளுக்கேற்ப விரித்தும் சுருக்கியுஞ் செய்து இருமையின்பத்தையுமடைதலே அறிவுடையார்க்கு அழகாகும் என்பது உணரக்கிடந்தவாறு காண்க.

இனி, கல்விச்செல்வமாவது,

"கற்க கசடறக்கற்றவை கற்றபின்
நிற்கவதற்குத்தக" என்றவாறு கற்றற்குரிய நூல்களை

நல்லாசிரியனை யடைந்து நன்கு வழிபட்டுக் கேட்குமுறையிற் கேட்டு ஐயந்திரிபு அறக்கற்றலாம். அந்நூல்களாவன—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களை யுணர்த்துவனவேயாம். அவற்றைக் கற்றவர்கட்கு அக்கல்வி எல்லாவற்றையும் பகுத்துணர்தற்கும், கொள்ளற் பாலனவற்றைக் கொள்ளுதற்கும், விள்ளற்பாலனவற்றைவிடுதற்கும் கருவியாய்இம்மை, மறுமைவீடுஎன்னும் மும்மையினும் இன்பம் பயத்தலினாலும், அவர் பிறவிதோறும் அழிவின்றி ஒருங்கு சேரலானும், அவர் சென்றுழியெல்லாம் அவர்க்கும் பிறர்க்கும் சிறப்பு செய்யலானும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் கொடுக்குந்தோறும் ஒரு காலைக்கொருகால் ஓங்கிவளர்தலினாலும் இன்ன பிறவாற்றானும் பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வமேமிகவும் மேம்பாடுடைத்தாம்,

இக்கருத்துப்பற்றியே,

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்றை யவை. எனவும்,
யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு. எனவும்,
ஒருமைக் கண்தான் கற்றகல்வி யொருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து. எனவும்,

தோலாநாவின் மேலோராகிய பொய்யாமொழிப் புலவர் கூறியதூஉம் என்க.

இன்னும் இக்கல்வியின் பெருமையை சிறப்புவகையான் கூறின் மோக்ஷத்திற்கு மிக்கசாதனமாயுள்ளது இதுவே யாம் என்பதனை,

"கற்றல் கேட்டல் உடையார் பெரியார்கழல் கைதொழுதேத்த"

எனவும்,

"கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்" எனவும்,

"கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும்
உற்றிலேன் ஆதலாலே உணர்விற்குஞ் சேயனானேன்"

எனவும்,

"கல்லாத புல்லறிவிற் கடைப் பட்டநாயேனை"

எனவும்,

"கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை
மற்றவரறியாமாணிக்க மலையை" எனவும்

வரும் மெய்ஞ்ஞானிகளது திருவாக்குகளான் தெற்றென வறிக.

இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய விக்கல்வியை மக்கட்பிறப்பினர் யாவரும் எத்துணைச் சிரமப்பட்டுங்கற்று இம்மையின்பத்திக் கேதுவாகிய பொருட்செல்வத்தோடு என்று மழியா வியல்பினதாகிய மோக்ஷப்பொருளாகிய பேரானந்தப் பெருவாழ்வையும் பெறுதற்கு ஒவ்வொருகணமும் முயலல் வேண்டுமென்பது சொல்லாமலே யமையக்கிடத்தலின், இதனை இவ்வளவில் நிறுத்தி யப்பாற் செல்லுகின்றேன்.

இன்னும்வரும்

W. T. கோவிந்தராஜ முதலியார்,

சிவமயம்.

திருசிற்றம்பலம்.

# தியாநாநந்தந் திகழுமிடமெது?

தியாநமாவது கடவுளுடைய அநந்த கல்யாணகுண விசிஷ்டங்களையும், சர்வகாரண சர்வஜ்ஞத்துவங்களையும் மெய்யறிவானே தெளிந்து, மனதை அப்பெருமானுடைய திருவடிகளிலே நிறுத்துதல். மனதை நிறுத்திவழிபடுவோர் அகக்கண்ணாகிய ஞானக் கண்ணினாலே ஈஸ்வரஸ்வரூபத்தைத் தரிசித்து ஆநந்தமடைகின்றனர். ஊனக் கண்கொண்டு காண்டல்முடியாத வொன்றேயன்றி, இறைவனருள் காட்டு மியற்கைபூண்ட இம்மாநுஷ்யதேகபலமும் வியர்த்தமாகும். ஆகலின், மனிததேக மகத்துவத்தை யறிந்து அறிவினை விகஸிக்கச் செய்தால், அவ்வறிவின் பேரொளியாகிய பதியை அறிந்து கதியுடைதல் கூடும்.

"ஊனக்கண்பாச முணரா துயிர்க்குயிரை
ஞானக்கண் ணாலுண்ணுடு."

சத்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ கந்தங்களாகிய தன்மாத்திரைகளின் வழியே மனஸை நிறுத்தாது வழிபட்டாலன்றிப் பரப்பிர்மத்தையறிதல் கூடாது. இதனாலேதான் மேதாவியர்களின் மனம் கடவுளிடத்தன்றிப் பிறிதொரு பொருளிடத்துஞ் செல்லாது அடக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது. தியாநஞ் செய்பவன் ஆன்மா, தியாநஞ் செயப்படுவர் கடவுளாகிய பதி, தியாநத்தினாலே அடையும்பேறு ஆநந்தம். இவ்வுயர் நிலையை யடைதற்கு இப்பிறவியிலே இலகுவாகச் செய்யும் புறவழிபாட்டையும், அதுவே நெறியாக அகவழிபாட்டையும் இவற்றின் முகிழ்ப்பானே சீவன் சிவனாதலையும் முறையே அறிக.

ஹிருதயஸ்தானத்திலே தீபவொளி யென்னவிளங்கும் சுத்த விகஸ்படிகனாகிய ஆன்மாவைத் தத்துவங்களினின்றும் (நேதிகளைந்து) வேறு பிரித்து, சிவபெருமானுடைய திருவருளாகிய சத்தியினாலே ஞாநத்தைப் பெருக்கி, அந்த ஞாந வொளியினுள்ளே பிரகா

சிக்கும் சுத்த சிவவொளியை மலினமின்றித் துலங்கச்செய்து அந்த ஞானவொளி முதல்வராகிய சிவபெருமானின் றிவ்விய திருவடிப்பேறே ஞானத்தாலடையும் பெரும்பேறாகும்.

"விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே."

இவ்வரிய பாசுரத்திலே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்பதன் பொருள்தொனித் தலையும் அறிஞர்கள் சிந்திப்பார்களாக.

நிற்க, உபாஸகனாகிய ஆன்மா உள்பொருளா இல்பொருளா என்னில், ஆத்மா எப்பொழுது முள்ளதேயாமென்க. ஆனால் ஜீவாத்ம குணத்துள் எதையாவது தாம் பின்பற்றாது, தம்மையே இவ்வாத்மா சேர்ந்து உய்வடைந்து ஈடேறும்படி செய்பவரே கடவுள். அக்கடவுளையே பரமாத்மா என்று கூறப்படுகின்றது. பரமாத்மா என்ற நாமோச்சாரணமே ஜீவாத்மாவின் குறைவுபாட்டை வெளிப்படுத்துகின்றது. ஜீவாத்மா தேகத்தைவிட்டால் ஈசனையடைதல் கூடாது. ஆகலின், தேகத்தின் கட்படுத்தி வினைகளைச்செய்து வினைப்பயனின் மேம்பாடுபற்றி அறிவின் றெளிவுகொண்ட இம்மாநுஷ்ய சட்டையைப் பெறும்பொருட்டு, ஆன்மாவுக்கு அருட்சத்தியை அநுட்டித்து நின்று ஆஜ்ஞைகொடுத்தருளியவர் பரமகருணாகரக்கடவுளே. அவரை மாநுஷ்யர்கள் மனதினாலே சிந்தித்தலும், வாக்கினாலே வந்தித்தலும், காயத்தினாலே வணங்குதலும் என்ற இவைகளை ஏற்றபடி நாடோறுந் தவறாது செய்துவந்தால் மேற்கூறிய தியானாநந்தநிலை சுலபமாகக்கிட்டும். அந்நிலையே அமரநிலையாகும். அதாவது இடா பிங்கலா நாடிகளை அடைத்துப் பிராணவாயுவைச் சுழுமுனா நாடியின் வழியே நிறுத்தவேண்டும். இப்படிச் சூரிய கலையோடு சந்திர கலையையும் அடக்கின்ற அவசரமே அநந்த வுயர்வுபெற்ற இடமாகும். இதனையே திராவிடநூலுள் "இராப்பக லற்றவிடத்தே யிருக்கை யெளிதல்லவே" என்று கூறப்பெற்றுள்ளமை காண்க.

வடமொழிநூலுள்ளும்,

நதிநெபூஜயெத்தேவமாத்ரௌநைவசநைவச
ஸர்ததம்பூஜயெத்தேவம்திவாராத்ரௌசவர்ஜயேத்.

இதன் கருத்து: சிவபெருமானைப் பகலினும் இரவினும் பூசை செய்யற்க. பகல் இரவு ஒழித்துச் சிவபெருமானை எப்பொழுதும் பூஜிக்க என்பதாம். இதுவே உண்மை நூல்களின் றுணிபு. சிவாகம வுணர்ச்சி யுடையார்க்கும் இது புலப்படும். (நீலகண்டபாஷியம் பார்க்க.)

இன்னும், மாசற்ற நெஞ்சர்களாகி மகா தொண்டர்களுடைய ஹிருதய கமலத்தினிடத்தே சுத்தமாகப் பிரகாசிக்கும் மேலான ஸ்தாணுவாகிய ஜோதிஸ்வரூபராகும் சிவபெருமானுக்கு உதயாஸ்தமயனங்களின்மையினாலே பகல் இரவு என்ற பேதத்தை உண்டாகக் காணாது நித்தமுஞ்செயற் பாலனவாய விரதாதிகளையும் விட்டுச் சதாநந்த பரிதர்களான விஞ்சையர்கள் பலருளர். இந்தப் பெருமையே பெருமை. இந்த உயர்ச்சியே உயர்ச்சி. தபத்தையாண்டு அவத்தையொழித்து நடப்பதற்கான பஞ்சாக்ஷர மஹாமந்திரப் பொருளாகிய இறைவனை இப்படியே உபாசித்து அடைவதே அறிவின் முறைமை. இந்தத்தேகமே சிவஸ்வரூபமாகும். ஒருமானுஷ்யனைப் பார்த்தால் மேற்கதியே அவனிடத்துள்ளது. வடிவம் பிரணவமே. இவைகளைப் பிர்ம்மஜ்ஞாநியேயறிவார். வாக்குமநாதீததமானபொருள் ஏடனை வழியானே யுழ்லும் ஏழைகளுக்கு அரியதேயாம். மோஹமற்றதே மோக்ஷம்.

“கரவி லுள்ளமாம் விசும்பிடைக்காசற விளக்கும்
பரசிலாச்சுடர்க் குதயமீறின்மை யாற்பகலு
மிரவுநேர்பட்டக் கண்டிலரியன்று செய்நித்த
விரதமாதிநோன் பிழந்துறைவிஞ்சையர் பலரால்.”

(திருவிளை: வாதவூரடிகள் உபதேசம், ௱௲.)

“அகலமா மாகாயத்தி னமர்ந்ததோர் ஞாநாதித்தன், விகலமாயுதியானந்த மேவிடான் சந்திதன்னை, யிகலற வியம்புமாறதெங்ஙனமென் றெண்றெண்ணி, முகில்சொரி நீத்தமின்றி முடித்துநீ சந்தியெல்லாம்” (தசகாரியம்)

ஏனைநா னென்பதறியேன் பகலிரவா வதுமறியேன், மனவாசகங்கடந்தா னெனைமத்தோன் மத்தனாகிச், சினமால் விடையுடையான் மன்னுதிருப் பெருந்துறையுறையும், பனவ னெனைச் செய்த படிறறியேன் பரஞ்சுடரே. (திருவாசகம்)

இனி, நித்திரையுற்முன் கைப்பெர்ருளென்ன் இயமநியமங்க ளொழியவேண்டும். நான் என்னும் அகங்காரத்தினல் நிரயப்பேறுண் டாகும். விரதாதிகளை அறட்டித்து நீங்கும் ஞான்றுஉணராது தானே நீங்கவிடுவது ஞானிகளிலக்ஷணம். இதனையே, "விரதமெலாம்மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்" என்றுதெய்வத் திருநெறித் தமிழ் வேதமுடையாருந் திருவாய்மலர்ந்தருளினர். வாதாடும் வன்கண் ணர்க்கு வளர்மதியூட்டல் வள்ளலாகிய தியாகராஜப்பெருமான் றிரு வருளின்பா லமைந்ததாகும்.

(உபசங்காரம்)

அன்பர்களே! இதுவரையினும் கூறிப்போந்தவற்றுன் தியாக மாவது இது என்பதூஉம், தியாகிக்கப்படுபவர் இவர் என்பதூஉம், தியாகிப்போன் இவன் என்பதூஉம், தியாகப்பேறு ஆநந்தமே யென் பதூஉம், ஆநந்தத்தின்மேலே யாதுமின் றென்பதூஉம், இந்தவுண்மை களை யுணர்ந்து சிவஞானசாதகமான தியாகத்தை வழுவறப் புரிந்து மோக்ஷம்பெறவேண்டி, வேண்டியன வேண்டுவார்க்கீயும் விமலனை யுபாசிக்கவேண்டும் என்பதூஉம், அங்ஙனம் உபாஸிப்பார்க்குஞ் சுழு முனாநாடி ஸ்தானமே உன்னத ஸ்தானமாகும் என்பதூஉம், இவற் றையேயாவரும் பெறப் பிரார்த்தித்தலாவஸியகமாகும் என்பதூஉம், சரியாபாதம் கிரியாபாதங்களிலுள்ள செயல்களைத் தவறாது செய்து வருதல்வேண்டும் என்பதூஉம் பிறவும் சுருக்கிவிளக்கப்பெற்ற வாறுணர்க. அன்றி, தியாகாநந்தர் திகழுமிடம் எது என்பதற்கு இராப்பகலற்றவிடம் என்பது மறுமொழியாகச் சம்பூர்ணமடைதலை யும் நோக்குக.

யாழ்ப்பாணம்: வ. மு. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர் ஞாநப்பிரகாச சபை,
புதுவாயல், இந்தியா.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதங்
கையினாற் றொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

சிவவழிபாடு—சிவனுக்குச் செய்யும் வழிபாடு என விரியும். சிவம்—நிரதிசய இன்பமாகிய மங்கலம். வழிபாடு—வணக்கம். அந்த நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள். நிரதிசய இன்பமென்பதுவே மோக்ஷமாதலின் சிவன் எனற்கு மோக்ஷதாதா எனப்பொருள் கூறுவது மொன்று.

இனி இத்தகைய சிவனது தன்மைகள் யாவை? வழிபடற்பாலர் யாவர்? அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? வழிபாட்டால் அடையும் பலன் யாது? என ஆராய்வாம்.

சிவனது தன்மைகள்:—(1) ஏனைத்தேவராதியர் யாரும் பிறந்திறக்கு மியல்பினராதல் போல சிவபிரான் பிறத்தலும் இறத்தலுமில்லாத அநாதி நித்தியப் பொருளாதல். (2) எல்லாத்தேவருந் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங்கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை. (3) எல்லாத்தேவர் வலிமையும் தன்னுளடங்குமாறு தான் வரம்பிலாற்றல் கொண்டமை. (4) தானே மோக்ஷதாதாவாதல். (5) பஞ்சகிருத்திய சுதந்தரமுடைமை என இவ்வை முதற்பலவாம்.

(1) வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயுமிடத்துச் சகல தேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலும்

கேட்கப்படுகின்றன. சிவபிரான் அங்ஙனம் பிறந்ததாகவேனும் இறந்ததாக வேனும் யாண்டுங் கேட்கப் படவில்லை. இதனை

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ் சொல்லாற் றெளிந்தோநஞ் சோமேசர்—இல்லிற் பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட்டிலோம்" என்பதனானுமறிக.

(2) சகல தேவர்களும் ஒவ்வொரு வரங்களை வேண்டிக் காலந்தோறும் சிவபிரானைப் பூஜித்து அருள் பெற்றதாகக் கூறுஞ் சரிதங்கள் பலவுள்ளன. யாண்டாவது எக்காலத்தேனும் சிவபிரான் வேறொருவரைப் பூஜித்ததாக எந்த நூலுங் கூறக் கேட்டிலம். இக்கருத்தை

"இன்னுமுயர் பரசிவனை யிருதிணையி னுயிரனைத்து, மன்னும் வழி பாடியற்றி வயங்கியவைக் கறிகுறியா, யின்னுபல தலம்பொலியு மன்றி மினி ரனையபிரா, னுன்னியொருவரைப் பூசையு ஞற்றியது முண்டுகொலோ"

என்பதாற்காண்க.

(3) சிவபிரான் சர்வவியாபகம் சக்தியுறுதலும், ஏனையதேவர்கள் வலிமையெல்லாம் சிவபிரானுக்கு உரியனவாகக் கூறும் வேதங்கள், சிவன் என்னும் திருநாமத்தை சிவபிரான் ஒருவருக்கேயன்றி வேறு எத்தேவர்க்கேனும் கூறாமல் விட்டது இக்கருத்தை விளக்கியே

"சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான், அவனெனை யாட்கொண்டளித்திடு மாகி லவன்றனை யான், பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா, லிவனெனைப் பன்னாளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

எனத் தமிழ்வேதங் கூறுதலுணர்க. அன்றியும், வேதங்களின் மத்தியில் உயிர் நிலையாக விளங்குவதும் சிவ நாமமே யாம். அதாவது:—இருக்கு யசுர் சாமம் என வேதங்கள் மூன்று, அவற்றுள் நடுவாயது யசுர்வேதம். அது எழுகாண்டங்களையுடையது. அவற்றுள் நடுவில் சிவபிரான் திருநாமம் விளங்குவதாக அடியில்வரும் செய்யுளானறியலாம்.

மும்மறையி னடுமறையின் முனிவிலெழு காண்டத்திற், செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில், அம்மநடுச் சங்கிதையினுதிப்பீ றெழித்துநடுப் பொம்மலுற வமர்மநுவின் பொருளாவானெவன் மைந்த.

(இன்னும்வரும்)

இந்துசாதனம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சமய அருட்சி.

தொடர்ச்சி - பகுதி-க. பக்கம் - உ0.

இவர்களெல்லாம் இந்துக்களாகிய நாம் சமய வாயிலாகவன்றி லௌகிகத்திற்றானும் விருத்தியுறுவது கூடாதென்பதைச் சிந்திக்கின்றாரில்லை. ஏனையதேசங்கள் எல்லாம் லௌகிக நாடுகளேயாதலின் அங்குள்ளார் சமயசிந்தனையின்றி லௌகிகத்தின் விருத்தியுறுவது ஒருவாறு கூடும். புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே வந்து செனிக்கும் பாக்கியம் படைத்தவர்கள் சமயத்துறையா லன்றி யாதொரு விருத்தியும் பெறுவது ஒரு சிறிதும் கூடாது. மானுடர் மாத்திரமல்ல, விலங்கினங்கள் தாமும் தத்தமது இயற்கை முறையை யனுசரித்தே விருத்தியுறுதல் வேண்டும். பரதகண்ட வாசிகளாகிய இந்துக்களது இயற்கைத் தருமமே சமய நாட்டமுடையதாய் இருக்கும்போது, அந்நாட்டத்தைப்புறந்தந்து இவர்கண் விருத்தியுறுமாறு சிறிதும் வாய்க்கமாட்டாதென்னும் இந்த உண்மையைக் காணவொட்டாது நமது நாட்டாருட்பலரை மேலைத்தேசாபிமானம் கிரகணித்து விட்டது. ஆன்மார்த்தத்திலே கருத்தில்லாமல், லௌகிகத்திற்றானே தம்து கருத்து முழுவதையும் செலுத்துவ துண்டெனில், மேலைத் தேசவாசிகள் தாமும் அவலமுற்றழிய வேண்டிவரும் என்பது இப்போது அத்தேசத்திலே நிகழும் "பாரத" யுத்தத்திலிருந்து நாம்தெளிவுற விளங்கிக் கொள்ளலாம். எமது பரதகண்டத்திலே துவாபரயுகத்தில் நடந்த யுத்தத்தைப் பாரதயுத்தமென்பார். அது பாரை அதஞ் செய்ததில்லை. இப்போது நிகழும் யுத்தமே பாரை அதம் செய்வதாகலின் இதனையே "பாரத" யுத்தமெனத் தகும். மேலைத்தேசத்திலே

கடவுட் பத்தியும் சமய சிந்தனையும் இல்லாமைபற்றியே இந்த யுத்தம் நிகழ்வதாயிற்றென்பது மானுடதர்மத்தை நுணுகி ஆராய்வார்க்கெல் லாம் இனிது புலப்படும். இதுவே மேலைத்தேசத்தின் லௌகிகவிருத்தி யால்விளைந்தவிளைவு. இந்த விளைவையே பரதகண்டவாசிகள் தாமும் பெறுதல்வேண்டுமென்று பெருமோகங்கொண்டு, தமக்குப் பிதிரார்ச் சிதமாகக் கிடைத்த சமய நாட்டத்தைப் பரித்தியாகஞ் செய்துவிடப் பார்க்கிறார்கள். எவ்வெவரும் தத்தமது சமயத்தின் வழி ஒழுகிக் கடவுட்பத்தி செய்தாலன்றி, அவர்கள் லௌகிகங்களிற்றானும் உண் மையான விருத்தியுறுதல் கூடாதென்பதையும், ஏனைத் தேசத்தவர் கள் அவ்விருத்தியை ஒருசிறிது படைத்தாலும்; புண்ணியபூமியாகிய இப் பரதகண்டவாசிகள் சமயபத்தி யுடையராய்ச் சமயாசாரத்தைப் பாதுகாத்தன்றி ஒரு சற்றும் விருத்தியுறுவது கூடாதென்பதையும், இவர்கள்எல்லாம் சமயப்பற்றை இழந்து லௌகிகத்திற்றமது கருத்து முழுதையும் செலுத்தினதுபற்றியே முன்னொருகாலத்தில் தமது மேன்மைகளை எல்லாம் இழக்குங்குடியாயிற் றென்பதையும் நம்மவர் கள் ஒருபோதும் மறக்கலாகாது. இந்த உண்மையை நமது தேசத் திலே எல்லாச்சனங்களதுமனதிலும் அழுத்தமுறுமாறு செய்யவேண் டியது. சமயவிஷயத்திற் சிரத்தைகொண்டிருக்கும் இந்த மகாசமாஜத் தார் அனைவர்க்கும் பொருத்தகடனாம்.

இங்ஙனம்,

S. சபாரத்தின முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடு
மையனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதங்
கையினாற் றொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

சிவவழிபாடு—சிவனுக்குச் செய்யும் வழிபாடு என விரியும். சிவம்—நிரதிசய இன்பமாகிய மங்கலம். வழிபாடு—வணக்கம். அந்த நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள். நிரதிசய இன்ப மென்பதுவே மோக்ஷமாதலின் சிவன் எனற்கு மோக்ஷதாதா எனப்பொருள் கூறுவது மொன்று.

இனி இத்தகைய சிவனது தன்மைகள் யாவை? வழிபடற்பாலர் யாவர்? அவனுக்குச் செய்யும் வழிபாடுகள் யாவை? வழிபாட்டால் அடையும் பலன் யாது? என ஆராய்வாம்.

சிவனது தன்மைகள்:—(1) ஏனைத்தேவராதியர் யாரும் பிறந்திறக்கு மியல்பினராதல் போல் சிவபிரான் பிறத்தலும் இறத்தலுமில்லாத அநாதி நித்தியப் பொருளாதல். (2) எல்லாத்தேவருந் தன்னை வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தத் திருவருள் செய்து தான் வேறொருவரை வணங்கி நில்லாமை. (3) எல்லாத்தேவர் வலிமையும் தன்னுள்ளடங்குமாறு தான் வரம்பிலாற்றல் கொண்டமை. (4) தானே மோக்ஷதாதாவாதல். (5) பஞ்சகிருத்திய சுதந்தரமுடைமை என இவ்வை முதற்பலவாம்.

(1) வேதாகம புராணேதிகாச வாயிலாக ஆராயுமிடத்துச் சகல தேவர்களும் பிறரும் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலும் இறத்தலும்

தோலாவவை நாப்ப ணடைந்து துரும்புநட்டு
மாலாதி விண்ணோர் வலிமுற்றவு மாற்றவல்லோ
ஞாலால முண்டோ னவனேயகி லங்களுக்கு
மேலாய வேது வெனவிண்டது சாமவேதம்.

என்னும் காஞ்சிப் புராணத்திருப்பாசுரத்தானு முணர்க.

(4) அல்லதூஉம், யஜுர்வேத சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியோரை அன்னாதிகளுடன் சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறுகின்றமையும், சிவபிரான் ஈயுந்தாதாவாதலின் அப் பெருமானை அங்ஙனங் கூறாமையும், (ஒரு பிரபுவினிடம் யாசிப்பவர் அப்பிரபுவின் உடைமைப் பொருள்களில் எதையும் இரத்தல் போல் அப்பிரபுவை நோக்கி உன்னைக் கொடு எனக்கேட்டலின்மை ஊகிக்கத் தக்கது) "பிறராற் சாதிக்க முடியாத முப்புரங்களையும் நீறாக்கி யுலகங்களைக் காத்தமையால் பசுபதி நீயே, யாமெல்லாம் பசுக்கள் என்று அங்கீகரித்தனர் தேவர்கள்" என்பது முதலிய சுருதிகளுண்மையும் சிவபிரானே மோக்ஷதாதா என்பதை வலியுறுத்து வன வாகும்.

(5) ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்த லாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித் தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இருவினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவமும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்சகிருத்தியங்கட்கும் சிவபிரான் தலைவராவர். பிரம விட்டுணுக் களுக்குன்றோ படைத்தல் காத்தல் உரியன வென்னின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்டவர்களே யல்லது சுதந்தரத்துவம் பெற்றவரல்லர். மன்மதனை நீறாக்கிய காலத்து அவன் றந்தையாகிய திருமால் தானே காத்தற்றொழிலின் முழுச்சுதந்தரம் பெற்றிருப்பின் தன் மகன் நீறுபடாது காத்திருக்கலாம். பிரமன் படைத்தற் றொழிலின் முழுசுதந்தர முடையனாயின் சிவபிரானாற் கொய்யப்பட்ட தனது தலையை மீளப்படைத்திருக்கலாம். அங்ஙனஞ் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்

கள் சுதந்திரமுடையன வல்லவாதல் பெறப்படுதலுடன் சிவபிரானே பஞ்சகிருத்தியத் தலைவராதலும் பெறப்படும். இதனை,

"உலகமளித்தல் சுதந்திரமன் றுவண முயர்த்தோற் கெனவவன்சே யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்துபடைப்புஞ் சுதந்திரமன் றலர்மேல் லணையாற் கெனவவனை யரங்கத் திசைமா முகனுக்கிப் பலரும் வெருவப்பொழி நெய்த்தோர்பயிக்கம் புகுந்தோன் பதம்பணி வாம்" என்னும் திருவானைக்காப்புராணச் செய்யுளாலறிக.

இங்ஙனமாகச் சிவ பிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட்பான்புகினளவில்லை" என்றார் பெரியார். ஆயினும் இத்தகைய இருபத்துமூன்று காரணங்களைக் காட்டிச்சிவபிரானே பரம் பொருளென விளக்கி மாதவச் சிவஞான யோகிகள் கட்டளை யிட்டருளிய சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பி லோரகவலைமட்டும் கூறிமேற் செல்வாம்.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசாதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணகன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருகலி
னாழ்கடல் வரைப்பி னுன்றோ ரநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி

னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

இனி வழிபடற் பாலர் யாவர்? என ஆராய்வாம்.

எல்லா ஆன்ம கோடிகளுக்கும் வழிபடற் குரியனவே. அவற்றுள் ஐயறிவும் நிறையப்பெற்று நல்வினை தீவினை சுவர்க்க நரகமாதிகளை நூலறிவாற் பகுத்தறியும் விசேட வறிவையும் பெற்றுள்ள தேவர் முனிவர் முதலியவர்களும் மனிதரும் வழிபாடியற்ற வேண்டியவர்களேயாம். ஆயினும் மனிதவர்க்கத்தாரே இவ்வழிபாட்டிற்குப் பெரிதும் பாத்தியமுடையவராவர். தேவர்களும் தமது நல்வினைக்கீடாகச் சுவர்க்கபோகம் புசித்துத் தீர்ந்தபின்னர் பூமியில் மானிடராகப் பிறந்து சிவவழிபாடியற்றியே உயர்பதமுறுவர். ஆதலால் பெறுதற்கரியது மானுடப்பிறவியேயாகும்.

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
மானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரீனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் ஈண்டுக்கவனித்தற் குரியதாம். அன்றியும்,

(இன்னும்வரும்)

வியாசத்திரட்டு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இவை நமக்குத் துணையாகுமா?

இங்கே இனிமையாகக்கொள்ளும் பொருட்களையே இவைஎன்று குறிக்கப்பட்டது. நமக்கு என்றது ஆன்மாக்களுக்கு என்னும்பான்மைத்து. அஃது தேகத்துடன் ஆன்மாக் கூடிநிற்கும்போது கூறப்படும் பதம் நான்என்பதும் வழக்கு. மானுஷ்யஜென்மத் தேகமாகிய எங்களுக்கு இவ்வுலகின்கணுள்ள பொருள்களும், இன்பமும் ஆன்மாவுக்குத் துணையாகா என்பதே முகாமக்கருத்தாகும்.

இவ்வுலகம் காரியம். காரியத்திற்குக்காரணம் வேண்டும். எதனுற் காரியம் என்னில் தோற்ற ஒடுக்கக்கேடுகளினுலேயாம். தோற்ற ஒடுக்கமின்றி ஒரேபெற்றித்தாயபொருளே காரணமாகும். காரணமாவது காரியத்திற்கு முந்தியிருப்பது, அஃது பதி, பிரமம், கடவுள் என்று கூறத்தக்க சின்மாத்ரமூர்த்தியாக விளங்குவதாம். இதனுலே உலகமும். அதிலேயுள்ள பலவித விசித்திர மஹாஜாலப் பொருள்களும் அழியும் என்றும், அவைகளுக்குமேலான சிவமஹாஞானமே அழியாப்பொருளான பதியைக்கூட்டி மேலாங்கதிகாட்டும் என்றும் உணர்ந்து அன்பையும் ஆசையையும் பற்றையும் நீக்கிப் பக்தியைப் பற்றல்வேண்டும், இந்நிலையை யோகிகள் அடைவார்கள்.

"அஜரூபம் பசும் ஹத்வா ஞானசாஸ்திரேண யோஹவித்!
பக்ஷயே தஜஸ்யாமிஷம் பதுவக்காபஹாரகம்!!"

இதன் கருத்து: "ஆட்டுருபமாகிய பசுவைச் சிவஞானமாகிய அஸ்திரத்தினுலே வெட்டிச் சிவயோகியானவன் ஜனனத்தை நீக்குதலாகிய ஆட்டு மாம்சத்தைப் புசிக்க" என்பதாம்.

வேதங்களிலே கூறப்படும் ஆடு சிவாகமத்திலே தெரிவுறுத்தப்பெறும் பசுவாம் என்றும், இங்கே ஆட்டை வெட்டி என்றது சிவஞானாப்பியாசத்தாலே ஆன்மாவின் பிறவியை அறுத்தலாம் என்றும்

ஆட்டு மாம்சத்தை உண்ணுதலாவது பிறவிக்கேதுவாகிய தற்போதம் என்னப்படும் பசுபோதத்தை மேலே எழவொட்டாது சிவஞான முகிழ்ப்பானே அடக்கிவிடுதலாம் என்றும் செம்பொருள் புலப்படு தல் காண்க.

இவ்வுண்மைப்பொருளை நோக்குமிடத்து ஆன்மாவின் றன்மையும், அதற்காகச் செயற்பாலனவும், செய்தாற் பெறுங் கதியும் ஒருவாறு அறிஞர்க்குத் தெளிவாகும். ஆகவே லௌகிக சம்பந்தம் பெறுங் கெடுதியை யுண்டாக்கி ஆன்மலாபத்தைத் தடுத்து அருநரகத்தை ஆட்சியாக அவ்வான்மாவுக்குக் கொடுக்கும் என்பது நிதர்சனமாம்.

உலகத்திலே விரும்பும் பொருட்கள் பலவாய் விரியினும் ஆன்றோர் சுருக்கி விளக்கியிருக்கின்றார்கள். உலகவேடணை; உலகமே நமது சாஸ்வதமான இடம் என்றும், அதிலுள்ள மாடு கன்று காணி வீடு முதலியவைகள் நம்முடையவைகளென்றும் செல்லும் பிராந்தி. இரண்டாவது அர்த்தவேடணை; பொருளே பெரிதென்றும் பொருளினாலே செய்த ஆபரணங்களே அலங்கரிப்பன என்றும் பொன்னைத் திரட்டியுருட்டி "பூனை பவ்வி" ஒழித்தெனக்காக்கும் சுசுட்டு அறிவுடைமை, மூன்றாவது புத்ரவேடணை; புத்திரனே நம்மைக் கரையேற்றும் புகழும் வலியும் அமைந்தோன் என்று செல்லும் பற்று. ஈஷணா என்னும் வடமொழி ஏடணை என்றாயிற்று.

நாம் முன்னே எத்தனையோ ஜன்மங்களை எடுத்து எடுத்து எய்த்து இளைத்து மூர்ச்சித்து வருந்துந் தருணத்திலே கருணாநிதியாகிய சிவபெருமான் சிறிது திருக்கடைக் கணோக்கஞ் செய்தருளினார். அஃதாவது விஷத்தினாலே யாதுமுணராது மயக்கமுற்றானொருவனை மாந்திரீகன் கருடபாவனையினாலே நீக்கி அறிவுவரச்செய்து உய்விக்குமாறுபோலச் சிவபெருமானார் மாயாசம்பந்தமுடைய ஆன்மாக்களை இதனிடத்தினின்றும் நீக்கிக்காக்கவேண்டி அருட்சத்தியை அதிட்டித்து நின்று, கர்மம் சாபேக்ஷ நிலைநாடித் தேகங்களைக் கொடுத்தருளினார். அத்தேகங்களுள்ளே அறிவுடைய மாநுஷ்ய தேகமே விழுப்பமுடையதாயிற்று. ஆதலினாலே தான் மாநுஷ்ய ஜன்மம் உத்கிருஷ்ட முடையதென்று மேலோர் வகுத்தனர். (உத்கிருஷ்டம் உயர்வு)

இதனாலே என்ன, நன்றாக ஸ்நானம் பண்ணினோம், கடவுளைப் பிரார்த்தித்தோம். இனி என்னசெய்வது என்று ஆலோசித்தாலோ? நமக்குச் சொந்தமும் நிந்தமும் எவை? இன்னுஞ் செயற்பாலன யாவை? என்றற் றொடக்கத்த இவைகளைச் சிந்திக்கவேண்டிவரும். செய்யவேண்டியவை இறைவாநுக்கிரஹ பாத்யதையான சற்கருமங்கள். இக்கருமங்களைக் செய்யவொட்டாது மாயாசத்தி கெடுக்கும்.

அம்மாயாசத்தியை அச்சமின்றிநீக்கவல்லது அறிவாகிய மெய்ச் சத்தியேயாம். அறிவு உதயமானவுடன் ஆநந்தஸ்வரூப சிவம் இனிது விகஸிக்கும். சடலை ஞானம் பெற்றுக் கடவுளையடைய முடியாது. ஆதலினாலே என்றும் உள்ளது சத் என்றும் வேதாகம உபநிஷத உபபிருங்கணாதிகள் உத்கோஷிக்கும் பரமசிவ பரம்பொருளைத் திரிகரணங்களினாலேயும் வழிபட்டு, ஆசையாகிய மாசையொழித்தலே முறையாகும். மனசு இச்சையுடையது; அவ்விச்சை அவிச்சையேயாம். ஆன்மாவுடன் நமது வீடு வருமா? நமது பெண்டீர்வருவாளா? நமது உடுதுணிவருமா? நமது கை வருமா? பிறிதான இனியபொருட்கள் யாதும் வருமா? இறக்கும்போது இவை யொன்றும் வராவன்றோ! அன்பீர்! "காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே" ஆ! இவ்விதமான வாக்குக்களை அறியாமையினாலே தெரியாத்தனமுடையவர்களைச்சேர்ந்து தெரியாத்தினத்து என்செய்வோம்! என்ன துணையாகும்? ஒன்றுந்துணையாகாவன்றோ! பின்னை நன்னேயத்தை எங்கே வைக்கவேண்டும்? வெளிப்பெட்டியிலன்று! ஹிர்தயமாகிய உட்பெட்டியிலுள்ள நன்மணியிடத்திலே நமதுமனஞ் செல்லல்வேண்டும். இன்பநெறிக்கெல்லாம் மேலான இன்பநெறி காட்டுவது அப்பெரும்பரம் பொருளிடத்து அமைந்த கருணையாகும். இவைகளைப் பத்திய ரூபமாகவே அடியார்கள் அநுபூதியிற்கண்டு தெளிந்து மகிழ்ந்து அருளிச் செய்தார்கள்.

அடியாருறவு நின்பூசை நேசமுமன்பு மன்றிப்
படிமீதில் வேறுபயனுளதோ பங்கயன் வகுத்த
குடியான சுற்றமுந் வாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென் றினஞ் சார்ந்திலரே.

என்று பட்டினத்தடிகளும்;

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

கனியினுங் கட்டிப்பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினுந்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன்றன் னடைந்தார்க் கிடைமருதனே.

என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளிச்செய்தார்கள். இவைமாத்திரமா?

குசேலோபாக்கியானத்தும்,

சாருறு தந்தையாருந் தாயரு மனந்தஞ் சன்ம, வூருமோ ரனந்தம் வாய்த்த வுறவுமோ ரனந்தம் பெற்ற, பேருமோ ரனந்தங் கன்மப் பெருக்கமு மனந்தங்கொண்ட, சீருமோ ரனந்த மின்னுஞ் சேர்வது மனந்தமாமால்.

என்று கூறப்பெற்றதுங் காண்க.

## திரட்டுரை.

இதுவரையுஞ் சுருக்கி எழுதப் பெற்றவைகளானே இவ்வுலகத்துப் பொருட்களினும், மனை, புத்திராதியோர்களினும், மனதைச் செலுத்தாது மனோசங்கற்பத்தில் இவைகளைக் கனாப்போல நினைந்து ஒதுக்கிவிட்டு, நிலையான பொருளாய கடவுளிடத்தும் மெய்யடியாரிடத்தும் சத்கதா காலக்ஷேப, மஹோபந்யாச, புராண சிரவணாதிகளிடத்தும் மனதைச் செலுத்தியும் நமது வாணாளைக் கழித்தல்வேண்டும் என்பதாம். ஏன் அங்ஙனஞ் செய்யவேண்டுமென்றால் "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே" ஆதலினென்க. குரு வாழ்க.

முத்தாந்தவீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்தவீதிவருந் தேவே பராபரமே.

இங்ஙனம்,

**வ. மு. இரத்திநேசுவரையர்,**

தமிழ்ப்பண்டிதர்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# மெய்ம்மொழிவிளக்கம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அஃகறிவாய பசுபாச வறிவனைத்து நிகழ்தற்குரிய வாயிலாய மனவாக்குகளான் முறையேயுணர்தற்கும், உரைத்தற்குமுரிய குணங் குறிகளின்றி அனுபூதி யறிவொன்றான் அறிதற்குரிய சிவசத்தாயுள்ளவன், குறைந்தகலையை யுடையதிங்களையும், நிறைந்த நீரையுடைய கங்கையையுந் தரித்தருளிய திருவேணியுடையவன், ஒருழியன்றி யெங்கும் வியாபகமாதற் கேதுவாய சத்தியுடையவன், திருவம்பலத்துள் நின்றாடியருளுவோன், இவ்வியல்புடைய முதல்வனது செங்கமலமலர் போல விரிந்துவிளங்கிய சிலம்பணிந்த திருவடிகளை யாம் வாழ்த்தி வணங்குவாம் என்றவாறு.

இது வணங்கி வாழ்த்தி மதிப்பரும்பொருளை வணங்கி வாழ்த்தி மதித்தவாறு.

அநாதிபோத வறிவுருவாய பரம்பொருள், யாதினும் விரவாது தன்னியல்பின் நிற்குங்கால், சிவமெனும் பெயர்த்தென்பது தேற்றியருளுவார், உலகெலாமுணர்ந் தோதற்கரியவன் எனவும், பின் அநாதி பாசவறிவுருவாய அவையே தானாய பொதுவியல்பின் நிற்குங்கால் தாதான்மிய சத்தியென்னும் பெயர்த்தென்பது தேற்றியருளுவார் அலகில் சோதிய னெனவும், அதன்பின் அவைதா மைந்தொழிலுற்று

நிகழுங்கால், அவற்றை நடாத்தற்கண் தலைவனென்னும் பெயர்த்தென்பது தேற்றியருளுவார், நிலவுலாவிய நீர்மலிவேணியன் அம்பலத்தாடுவா னெனவும், அம்முறையாற் பகுத்துவைத் துபதேசித்தருளினார்.

இதனானே மனவாக்குகளா னோதி யுணரப்படாத அதீதநிலையனாயினும், அவற்றின்மேல் நின்றுணரமாட்டாவாய் அவற்றைச் சார்ந்து நின்றவுயிர் அவற்றானுந் தெளிந்தறிந்து எளிதின்வழிபட்டுய்தற்குரிய உருவடியுடையனா யருளும்பெருங்கருணை யுடையனாய வம்முதல்வனை யாமுயலு மிந்நூல் முற்று மாற்றான் முற்று மாறுவேண்டுங் கோண்முறை பற்றிவேண்டிக் கோடலென்கடனும், அதனை யவ்வாறு முற்றுமாற்றான் முற்றுமாறு செய்தலவன்கடனு மென்பதூஉம் போந்தவாறு காண்க.

உலகென்பது பலபொருளொருசொல்லாகலின் ஈண்டு இரட்டுறமொழிந்துகொண் டுரைக்கப்பட்டது. பசுவறிவு, பாசவறிவு இரண்டுந் தம்முளொன் றனை யொன்று இன்றியமையாவென்பது பற்றி இங்ஙனம் அவற்றிற்குப் பொதுவாய் நின்றதொரு சொல்லான் வைத்தோதியருளினர். அங்ஙன யுடைமையின் உயிர்த்தொழிலே முன்வைத்தருளினரென்பது. உணர்ந் தோதற் கரியவ னென்புழி உணர்ந்து ஓதற்கென்னுஞ் செய்தெ னெச்சமிரண்டும், பயந்து காத்தழிக்குமென்றாற்போல நின்றன. உணர்த்தற்கு மோதற்குமுரிய கருவிகள் ஆவாய் நிலையான் வந்தன.

ஈண்டு அருமை இன்மை குறித்துத் தழுவப்படும் பொருண்மேல் நின்றது, எலாமென எழுத்தஃகு சொல்லான் வைத்தோதியது அவைகுறையறிவின் பாலவென்பது சொன்னிலை யானுந்தேற்றற்குப் போலும், பாசவறிவென வொன்றாய் காட்சி, கருதல் உரையென மூன்றாய் நாதமீறாய் பலவேறாய் விரியுமெவையுமடங்க எல்லாமெனனவைத்தோதப்பட்டது. உயிருணர்வொன்றாயினும் பலவேறாய் நிகழ்தல் பலவேறு வகைப்பட்ட வியஞ்சக வேற்றுமை பற்றியாகலின், அதனையவற்றிற்காதாரமாய வதன்பின்வைத்தோதப்பட்டது. காணப்படாத முதல்வ னுண்மையு முணர்த்துமாறு நோக்கிக் காணப்பட்ட உலகசத்தம் முன்னெடுத்துக் கொள்ளப்பட்டது, அரியவனென்பது உணர்தல் ஓதல் இரண்டனோடுந்தனித்தனி சென்றியையும், குறைமதி நிறைமதியாய் நீண்டதென்பது சொல்லியல் பானுந்தேற்றியருளுவார்

உலாவியவென நீட்டல் விகாரம் படவோதினார். உலவுதல், குறைதல், கலை யென்பது கூறுமேயமையும், உலவிய நிலவெனவியையும், பிறை மதியென்றவாறு. மலி நீரென்பதுமஃது, அஃதீண்டன்மொழித்தொகையாய்க் கங்கையை யுணர்த்திநின்றது, அலகிலென்றுங் குறிப்பெச்சவீறுகெட்டு நின்றது. நிகழ்தல், தரித்தல், அணிதல் மூன்றுஞ்சொல்லெச்சம். மலரடி யென்புழி யுவமையுருபு தொக்கு நின்றது. இனியடிமலரென வுருவகமாக வைத்துரைப்பினு மமையும். அடியென்பதனோடு மலர்சிலம்பிரண்டுந் தனித்தனி சென்றியையும்.

அற்றேலுணர்ந்தோதற் குரிய பொருளா னெமக்கு ஆகக்கடவது ஒன்றின்று போலுமென வழிபாட்டின் மனவெழிச்சிசெல்லாது மடங்குவாரை நோக்கி, அங்ஙனமடங்காது மனவெழுச்சி செல்வித்தற்பொருட்டு அங்ஙனமாயினும் உயிர் படி முறையின் வைத்து எளிதின் வழிபட்டுய்தற்கேற்ற வுருவடிவுடையனாயும் வைகுகின்றனனென்பது தேற்றியருளுதற்கு வேணியனென வடையாளங்காட்டியதனடுக்க வைத்தோதினார். ஓதினாராயினும் பொருண்முறைக்கேற்ப அரியவன் சோதியன் வேணியன் ஆடுவானென்பதே ஆசிரியர் கருத்தென் றுணரற்பாற்று. முறையே சிறிதும் பெறிதும் புலனாகாமையின் அருவ அருவுருவங்களை யோதாராய் புலனாதற்குரிய உருவொன்றனையே யோதினார் எவருமெளிதினேன்று கோடற்பயனோக்கி. இனியுருக்கூறவே பொருளான் வேறுபடாத வேணியவும் பெறப்படும்.

உலகின்கட்டலையாய வியல்புடையராயினார் குறைகூறுவார்க்கும் முறைகூறுவார்க்கும் எளிய்செவ்வியராய் வைகிப்பாலித்தற் கடமையுடையராக வேண்டுமென்பது, தான்வைகிக் காட்டாக்கால் காண்பாரின்மையின் அவ்வாறு வைகிக்காட்டும் பேரிறைவனென்பது தேற்றியருளுவார் அங்ஙனம் விசேடித்தாரென்பது இ[illegible]யோடியைந்து நின்றுணர்த்தற்கண் ணிகழும் அதிசூக்கும வைந்தொழில் ஒருவன் தானதனுட்கரந்து பிறரொருவன் வேடங்கொண்டு ஆடுமாறு போறலின் ஆடலெனப்பட்டது, இதற்கிதுவே சிறந்தபொருளென்

பது அந்தமிலா, வளவில் சோதியாய் ஞானமூர்த்தியாய் ஆடுமெனவும் இறைவனேங்கொளியாய் ஞானமூர்த்தியாய் நிருத்தஞ்செய்யுமெனவும் நூலாசிரியரிருவரும் வழிபடுங்காலிதனையே வழிமொழிந்து கொண்டு வழிபட்டமையானுமறிக.

இனி யுலகெலா முணர்ந்தோதற் கரியவனென்பதனைக் காட்டியுப கரித்தற்கட்படு மியல்புபற்றி யோதியதெனக்கொண்டு உயிர்கள் தாமறிய வேண்டுவன வனைத்தையுந் தன்னுணர்ந்து நின்றும் அவ் வாறுணர்த்தி யுபகரிக்குந்தன்னை யுணர்தலரியனுய்க்காந்து நிற்பனென வுரைத்தலுமொன்று. இப்பொருட்கு எல்லாவற்றையு மென்னுஞ்சாரி யையுருபு உம்மைகளும் உணர்ந்துமென்னு மும்மையும் ஓர்தலென்புழி ரகரமெய்யும் விகாரத்தாற் றொக்கன,

இந்தனத்தி லெரிபோலத் தோன்றாது நிற்றல்பற்றி யோர்தற் கரியனென்றார். எனவே அஃதோரவல்ல குரவர்க்கு எளியனாகலான். அவனருளானுக்குமிந்நூல் அருள்நூலாமென்பது.

இங்ஙனமன்றி யுரைப்பன வெல்லாம் போலியென்பது மொழி நிற்குமுறையானும் ஆகமாந்தப் பொருளொருமை போதித்தற்கெழு ந்தநூல் முதலியவற்றானு மறிந்துகொள்க பிறவுமன்ன.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை,
வீரசோழகன்
சிவஞானத்திருத்தளி
ஸ்ரீ சிதம்பரம்

# நீதி. அ.

"தம்முடைய கைப்பொருளைச் செலவிட்டாவது அயலாருக்கு ஓர் பெரிதான லாபத்தை வரச்செய்யும் குணமுள்ளவர்கள் தான் உத்தம புருஷர்கள்; தம்முடைய பொருளுக்கு ஒரு கெடுதலும் வாராமல் அயலாருக்கு லாபம்வரச் செய்கிறவர்கள் சாதாரணமானவர்கள்; தம் முடைய திரவியத்தை விருத்திசெய்வதற்காக அயலாருக்கு வரும் ஓர் லாபத்தைக் கெடுக்கிறவர்கள்தான் மனிதராகப் பிறந்த ராக்ஷதராவார்கள்; ஆனல், அகாரணமாகவும், நிஷ்பிரயோஜன மாகவும், அயலாருக்குக் கெடுதி செய்கிறவர்களை இன்னவிதமான மனிதரென்று நமக்குச் சொல்லத் தெரியவில்லை."

உ
சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபுண்ணியம்.

நம் சைவசித்தாந்தமானது எவ்வாறு, பதி, பசு பாசம் என மூன்று விதமாக விளங்குவதோ அதுபோலவே இப்புண்ணியமும் மூவகைத்தாக உளது. அம்மூவகையாவன பதிபுண்ணியம் பசு புண்ணியம், பாசபுண்ணியம் என்பனவாம். இவை முறையே உத்தமம், மத்திபம் அதமம் என்று சொல்லப்படும்.

முதலாவது கடைசியாகிய பாசபுண்ணியத்தைச் சிறிது புகலுவோம். மனைவி, புத்திரர், உடன் பிறந்தார் இன்னம் மற்றுமுண்டான சுற்றத்தாரைக் குறித்துத் திரிகரணங்களாலும் அருத்தத்தாலும் செய்யும்படியான விஷயங்களனைத்தும் பாசபுண்ணியமென்று சொல்லப்படும்.

இவை மூவகையாகச் செய்யப்படும். அவையாவன, மனைவி முதலானவர்களுக்கு மேலும் மேலும் ஆகவேண்டிய நற்காரியங்களை நினைத்தலும், அவர்களுக்கு எவ்விடத்திலும் துக்கம் வாராவண்ணம் யோசித்தலே மனத்தின் காரியமாம்.

அவர்களிடத்தில் இனிய சொற்கூறல தன்னாலாகாத காரியங்களையும் பிறரிடம் சொல்லி அவருக்கு முடிப்பித்தல் முதலான விஷயங்கலெல்லாம் வாக்கின் காரியமாம்.

அவர் சொல்லைவேதவாக்கியம் போற்கொண்டு எவ்வளவு தூரமாயினும் தேகசிரமம் கருதாது போதலும் அவருடன் கலந்து அளவளாவி யிருந்தலும், காயத்தின் காரியமாம்.

அவர்களுக்கு வேண்டிய வஸ்திரம் பூஷணம், ஆகாரம் முதலானவைகளைக் குறித்துச் செலவழிக்கும் விஷயங்களெல்லாம் பொருட்காரியம்.

ஆனால் இவர்களைக் குறித்து இவ்வளவு சிரமப் பட்டுச் செய்வதனாலுண்டாகிய பலன்யாதென்று யோசித்தால், இம்மனைவி புத்திர

முதலானவர்களெல்லாம் நம்மிடத்தில் அவர் முன் பிறப்பில் கொடுத்தகடனை வாங்கிக்கொண்டு போக வந்தவர்களே. அவர்களால் நாம் மேற்சொன்ன சுகங்களனுபவிப்பதுள தென்றால் அவர் நமக்கு கடன்காரராக இருக்கவேண்டும்.

"பாணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங்கைபிற்றந்த விரணமானவை கொண்டு மற்றிவரை விட்டியம் பிடாதிவனேரு மரணவாதனை யாவராலறியலாமயங்கி யைம்புலனந்தக், காணம் யாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பார்" என்றதனுற் காண்க.

இப்பாச புண்ணியமானது மேலும் மேலும் ஜென்மத்மைதயுண்டாக்கி அந்தந்தப் பிறப்பிலும் ஜீவர்கள் முன்னிலையில் சுகதுக்க போகங்களை அனுபவிப்பதற்கு ஏதுவான பலனைக் கொடுக்கிறது ஆனதாற்றானிதை கடைசியாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது இடையாகிய பசு புண்ணியத்தைச் சிறிது சொல்லுவோம். மேற் சொல்லிய வண்ணமே தரும சிந்தையுடையவனாயிருத்தல், தருமங்களைப் பிறர்கேட்கப் போதித்தல், தீர்த்தமாடல், யாகாதி கிர்த்தியம் செய்தல், தானதர்மம் செய்தல் முதலானவைகளாம். ஆனால் இதற்குப் பலன் யாதென்றால் இச்சரீராந்தியத்தில் எமதூதர்கள் பூதசாரதேகமென்று சொல்லும் சரீரத்தில் இந்தச் சீவனைப் பிரவேசிக்கச் செய்வார்கள். உடனே தேவகணங்கள் ஓர் திவ்ய விமானத்திலேற்றிப் பொன்னுட்டுக்குட் கொண்டுபோய் அந்நாட்டுக்கிறைவனாகிய தேவேந்திரனுடனிருந்து பஞ்சதருக்கள் அப்சரஸ்ரீ அமிர்தாதி போகங்களை யனுபவித்தலேயாம்.

ஆனுலிதைவிட மேலானதாகிய சுகம்யாதுளதென்று நினைக்கக்கூடும். இந்த வுலகமானது அழிந்து போகக் கூடியதாயும் இந்த உலகத்துக்குத் தலைவனாகிய இந்திரனும் தேவர்களும் பொன்றக்கூடியவர்களாயும் இவர்கள் திரிகாலத்தில் அனுபவிக்கும் போகங்களுக்கும் இடையிடையே விபத்து அதிகமுண்டாகிப் பெருந்துக்கம் மனுபவிக்கிறபடியாலும் இங்குத் தர்மங்களைச் செய்து அங்குச் சுவர்க்கத்தை அனுபவிப்பவர்களுக்கு இங்குச்செய்த தர்மமூலமாக விருக்குமிவன் பெயர் இங்கு மறையுமானல் அப்பொன்னுட்டார் இவனை

பழையபடியே பூலோகத்தில் அனுப்புவர்கள் என்பதும் மீண்டும் இந்த உலகத்தில் பிறந்திறந்து துக்கத்தை யனுபவிப்பதும் திண்ணம்.

"தருநிழலும் நல்லமிர்துந் தண்டாத மங்கையரும்
வருமென்று வேள்விசெயு மத்திமர்காள்—தருபாமே
யமிர்தம் பசுவின்பா லாயிழையார் வேசியென
வுமைபங்கனுகம மோதும்" எனவும்,

"ஆனவர் நல்குநதியாயிரஞ் சென்றுடுகில்லென்
றானப்பதினுலுந் தாஞ்செயினெ-ஞனனங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண்ணுத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று" எனவும்,

"காடுபோந்தனனிந்திரன் பொன்னகர் கரிந்து
பாடுசேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப்பட்டான்
நாடில்விண்பதச் செய்கையீ தெம்பிரானல்கும்
வீடதேயலாற்றுன் பறுமாக்கம் வெறுண்டோ" எனவும்,

"அண்டர் பொய்வாழ்வையு மயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகிலேனியான்
றண்றடகளணிந்த நின்சரணத்தன்பையே
கொண்டிட வேண்டுவனென்று கூறினன்" எனவும் வருவன வற்றுற் காண்க,

எனமேலோர்கள் கூறியுள்ளாராகையினுலும் இப்போகம் ஒரு கணத்தில் மாறிப்பிறப்பைக் கொடுக்கக் கூடியதாகையால் இதனை மத்திமமென்று சொல்லப்பட்டது.

மூன்றுவது தலையாகிய பதி புண்ணியத்தைச் சொல்லுவாம்.

சிவபத்தி, அடியார் பணி, ஞானசாஸ்திரம ஓதல், ஓதுவித்தல் மெய்யன்பர் சேவை முதலானவைகளாம். சிவபத்தியானது மனோ வாக்குக் காயங்களினுல் செய்தல் வேண்டும். தான் கட்டியிருக்கும் வேட்டியில் அழுக்கேறுவதுபோல் இவ்வுலகத்துத் துர்வாசனையால அவை மூன்றுக்கும் அழுக்குண்டாகிறது. ஆடையிலுள்ள அழுக்கைச் சுத்தஜலத்தைக் கொண்டு போக்குவது போல அவை மூன்றுக்குண்டான வழுக்கைத்தியான தோத்திர அருச்சனை யென்னும் ஜலத்தைக் கொண்டு போக்கவேண்டும்.

முதலாவது மனதுக்கு, அழுக்கு, பொறாமை, ஆசை கோபம், இரண்டாவது வாக்குக்குப் பொய் புறங்கூறல், தீச்சொல், மூன்றாவது காயத்துக்குப் பிறரையடித்தல், பரஸ்திரீ கமனம்பண்ணல், கூத்துப் பார்த்தல் முதலாயின.

மனத்தால் இறைவனது திருநாமமாகிய ஐவகைப் பஞ்சாக்கரத்தைத் தியானித்தல் தேவார திருவாசகம் முதலாகிய திருமுறைகளும் பாராயணம் செய்தல் காயத்தால் பத்திரபுட்பங்களைக்கொண்டு சிவபெருமானைப் பூசித்தல், சிவாலயம் வலம்வருதல் முதலானவைகளைச் செய்தல்.

"திருக்குறுமழுக் காறவாவொடு வெகுளி செற்றமாகிய மனவழுக்கைத் தியானமென்புனலால் பொய்புறங்கூறல் தீச்சொலென், கின்றவாய பூக்கை, யருட்கிளர்நினது துதியெனும் புனலாலயத்தொழிலொன்று மெய்யபூக்கை யருச்சனையெனும் புனலினாற் கழுவா வசுத்தனேனுய்யு நாளுளதோ, விருப்பொடு வெறுப்பிங்கிலாதவனென்னவெண்மதியோடு வெண்டலையு விரைவழி புகுந்து வண்டினம் பசுந்தேன் விருந்துணுங்கொன்றை மேல்மலரோடுமெருக்கையு மணிந்து மின்றெளி கடந்த விர்ஞ்சடைப்பரந்தணனுடைய விட்டநன்குதவி யென்காத்திருக்கும் ஈசனே மாசிலாமணியே" என்றதாற் காண்க.

அல்லாமலும் இப்படி சொல்லப்பட்ட புண்ணியத்திலும் ஒன்றுக்கொன்று மேலாகவும் சொல்லப்பட்டுள்ளது. அறமானது உலகத்தில் மேலானதென்றும், அதைக்காட்டிலும் சிவாலயம் கட்டுவித்தல் முதலான சிவபுண்ணியம் மேலானதென்றும், அதனினும் சிவாலயத்து அபிடேகாதிகள் அர்ச்சனை முதலானது செய்வித்தல் மேலானதென்றும், அதனினும் அடியவர் பூசையதிகமென்றும் சுருதிகளிற் சொல்லப்பட்டுள்ளது.

"அதிகநல்லற நிற்பதென்றறிந்தனை யறத்துள்
அதிகமாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனையவற்று
ளதிகமாஞ் சிவபூசையுளடியவர் பூசை
யதிகமென்றறிந் தன்பரையருச் சனைபுரிவாய்" என்றதனாற் காண்க.

(இன்னும்வரும்)

கா. வேதாசல முதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவவழிபாடு.

### தொகுதி 4. பக்கம் 45. தொடர்ச்சி.

வேதம் பலவிடங்களில் சிவபிரானைப்பிரமம் எனக்கூறுகின்றது. பிரமசப்தத்தை எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளுக்கேற்றிக் கூறா நிற்பர். அங்ஙனம் கூறினும் பிரமசப்தம் சிவபிரானுக்கே யுரித்தாதல் விளக்குதும். கேனோபநிடதத்தில் இந்திரன் அக்கினி வாயு முதலியோர் அசுரர்களைப் போரில் வெற்றி கொண்ட ஜயசீலர் யாம் யாம் என்று செருக்குற அதனையறிந்த பரமசிவன், அவர்கள் முன்னிலையில், ஒரு இயக்க வேடந்தாங்கிச்சென்று, ஒரு துரும்பை யெடுத்துக் கீழே நட்டு, இதனிடத்து உங்கள் வலிமையைக் காட்டுங்க ளென்று கூறினரெனவும், அக்கினியும் வாயுவும் தம் ஆற்றல் சிறிதுஞ் செல்லாமைகண்டு நாணமுற்று நிற்க, பின் இந்திரன் வந்தவுடன் இயக்க வேடந் தாங்கிவந்து நின்ற சிவபிரான் மறைந்தருளினர் எனவும், அப்பொழுது இமோற்பர்வத புத்திரியாகிய உமாதேவியார் விசும்பிற் றோன்றினரெனவும், அவ்வம்மையாரை நோக்கி அம்மே! இவ்வியக்கன் யாவன்? என்று இந்திரன் கேட்ப "இவன் பிரமம்" என்று அம்மையார் கூறியருளினரெனவும், கேட்கப்படுதல் பிரத்தியக்ஷமாம்.

இவ்வுபநிடதக்கூற்றால் இயக்க வுருவமாக வந்தது. "பிரமம்" எனக் காணப்படினும், அவ்வுருவம் சிவபிரானென்பது எதனாற் பெறப்படு மெனில் "தாயுடன் சென்று பின்றாதையைக்கூடி" என்ற முறைப்படி உமாதேவியாராகிய சிவசத்தியாற் காட்டப்பட்டமையால் அந்தப் பிரமம் பரமசிவனே யென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப் பெறும். வாயு சங்கிதை இக்கதையை நன்கு விரித்துக் கூறும். அன்றியும்,

தோலாவவை நாப்ப ணடைந்து துரும்புநட்டு
மாலாதி விண்ணோர் வலிமுற்றவு மாற்றவல்லோ
னாலால முண்டோ னவனேயகி லங்களுக்கு
மேலாய வேது வெனவிண்டது சாமவேதம்.

என்னும் காஞ்சிப் புராணத்திருப்பாசுரத்தானு முணர்க.

(4) அல்லதூஉம், யஜுர்வேத சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியோரை அன்னாதிகளுடன் சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறுகின்றமையும், சிவபிரான் ஈயுந்தாதாவாதலின் அப் பெருமானை அங்ஙனங் கூறாமையும், (ஒரு பிரபுவினிடம் யாசிப்பவர் அப்பிரபுவின் உடைமைப் பொருள்களில் எதையும் இரத்தல் போல அப்பிரபுவை நோக்கி உன்னைக் கொடு எனக்கேட்டலின்மை ஊகிக் கத் தக்கது) "பிறராற் சாதிக்க முடியாத முப்புரங்களையும் நீறாக்கி யுலகங்களைக் காத்தமையால் பசுபதி நீயே, யாமெல்லாம் பசுக்கள் என்று அங்கீகரித்தனர் தேவர்கள்" என்பது முதலிய சுருதிகளுண் மையும் சிவபிரானே மோக்ஷதாதா என்பதை வலியுறுத்து வன வாகும்.

(5) ஆன்மாக்களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விளங்க முதற்காரணமான மாயையினின்றுந் தநுவாதிகளைத் தோற்றுவித்த லாகிய சிருட்டியும், நிலைபெறச் செய்தலாகிய திதியும், இளைப்பொழித் தற்பொருட்டு மீட்டும் மாயையில் ஒடுக்குதலாகிய சங்காரமும், இரு வினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலாகிய திரோபவ மும், பந்தம் விடுவித்தலாகிய அநுக்கிரகமும் என்று கூறப்பட்ட பஞ்சகிருத்தியங்கட்கும் சிவபிரான் தலைவராவர். பிரம விட்டுணுக் களுக்கன்றோ படைத்தல் காத்தல் உரியன வென்னின், அவர்கள் அவற்றைச் செய்தலில் அரசனது ஆணைப்படி நடத்தும் மந்திரி முதலியோரைப் போன்று சிவபிரானது ஆணைப்படி நடத்தப்பட்ட வர்களே யல்லது சுதந்தரத்துவம் பெற்றவரல்லர். மன்மதனை நீறாக் கிய காலத்து அவன் றந்தையாகிய திருமால் தானே காத்தற்றொழி லின் முழுச்சுதந்தரம் பெற்றிருப்பின் தன் மகன் நீறுபடாது காத்தி ருக்கலாம். பிரமன் படைத்தற் றொழிலின் முழுசுதந்தர முடைய னாயின் சிவபிரானாற் கொய்யப்பட்ட தனது தலையை மீளப்படைத் திருக்கலாம். அங்ஙனஞ் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்

கள் சுதந்திரமுடையன வல்லவாதல் பெறப்படுதலுடன் சிவபிரானே பஞ்சகிருத்தியத் தலைவராதலும் பெறப்படும். இதனை,

"உலகமளித்தல் சுதந்திரமன் றுவண முயர்த்தோற் கெனவவன்சே யிலகு முருவம் பொடித்தவன்பா லெழுந்துபடைப்புஞ் சுதந்திரமன் றலர்மெல் லணையாற் கெனவவனை யரங்கத் திசைமா முகனுக்கிப் பலரும் வெருவப்பொழி நெய்த்தோர்பயிக்கம் புகுந்தோன் பதம்பணிவாம்" என்னும் திருவானைக்காப்புராணச் செய்யுளாலறிக.

இங்ஙனமாகச் சிவ பிரானது முழுமுதற்றன்மைகள் பலவாம். ஆதலின் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும், கேட்பான்புகினளவில்லை" என்றார் பெரியார். ஆயினும் இத்தகைய இருபத்துமூன்று காரணங்களைக் காட்டிச்சிவபிரானே பரம்பொருளென விளக்கி மாதவச் சிவஞான யோகிகள் கட்டளையிட்டருளிய சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பிலோரகவலைமட்டும் கூறிமேற் செல்வாம்.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசாதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணகன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னைங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடல்விட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்செயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருகலி
னாழ்கடல் வரைப்பி னன்றூே ரநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி

னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

இனி வழிபடற் பாலர் யார்வர்? என ஆராய்வாம்.

எல்லா ஆன்ம கோடிகளுக்கும் வழிபடற் குரியனவே. அவற்றுள் ஐயறிவும் நிறையப்பெற்று நல்வினை தீவினை சுவர்க்க நரகமாதிகளை நூலறிவாற் பகுத்தறியும் விசேட வறிவையும் பெற்றுள்ள தேவர் முனிவர் முதலியவர்களும் மனிதரும் வழிபாடியற்ற வேண்டியவர்களேயாம். ஆயினும் மனிதவர்க்கத்தாரே இவ்வழிபாட்டிற்குப் பெரிதும் பாத்தியமுடையவராவர். தேவர்களும் தமது நல்வினைக்கீடாகச் சுவர்க்கபோகம் புசித்துத் தீர்ந்தபின்னர் பூமியில் மானிடராகப் பிறந்து சிவவழிபாடியற்றியே உயர்பதமுறுவர். ஆதலால் பெறுதற்கரியது மானுடப்பிறவியேயாகும்.

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காகவன்றோ
மானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்ப
ரீனெடுத் துழலு மம ரொன்றையு மூணரா ரந்தோ"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் ஈண்டுக்கவனித்தற் குரியதாம். அன்றியும்,

(இன்னும்வரும்)

வியாசத்திரட்டு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இவை நமக்குத் துணையாகுமா?

இங்கே இனிமையாகக்கொள்ளும் பொருட்களையே இவைஎன்று குறிக்கப்பட்டது. நமக்கு என்றது ஆன்மாக்களுக்கு என்னும்பான்மைத்து. அஃது தேகத்துடன் ஆன்மாக் கூடிநிற்கும்போது கூறப்படும் பதம் நான்என்பதும் வழக்கு. மாநுஷ்யஜென்மத் தேகமாகிய எங்களுக்கு இவ்வுலகின்கணுள்ள பொருள்களும், இன்பமும் ஆன்மாவுக்குத் துணையாகா என்பதே முகநாமக்கருத்தாகும்.

இவ்வுலகம் காரியம். காரியத்திற்குக்காரணம் வேண்டும். எதனாற் காரியம் என்னில் தோற்ற ஒடுக்கக்கேடுகளினாலேயாம். தோற்ற ஒடுக்கமின்றி ஒரேபெற்றித்தாயபொருளே காரணமாகும். காரணமாவது காரியத்திற்கு முந்தியிருப்பது, அஃது பதி, பிரமம், கடவுள் என்று கூறத்தக்க சின்மாத்ரமூர்த்தியாக விளங்குவதாம். இதனாலே உலகமும். அதிலேயுள்ள பலவித விசித்திர மஹாஜாலப் பொருள்களும் அழியும் என்றும், அவைகளுக்குமேலான சிவமஹாஞானமே அழியாப்பொருளான பதியைக்கூட்டி மேலாங்கதிகாட்டும் என்றும் உணர்ந்து அன்பையும் ஆசையையும் பற்றையும் நீக்கிப் பக்தியைப் பற்றல்வேண்டும், இந்நிலையை யோகிகள் அடைவார்கள்.

> "அஜரூபம் பசும் ஹத்வா ஞானசாஸ்திரேண யோஹவித்!
> பக்ஷயே தஜஸ்யாமிஷம் பதுவக்காபஹாரகம்!!"

இதன் கருத்து: "ஆட்டுரூபமாகிய பசுவைச் சிவஞானமாகிய அஸ்திரத்தினாலே வெட்டிச் சிவயோகியானவன் ஜனனத்தை நீக்குதலாகிய ஆட்டு மாம்சத்தைப் புசிக்க" என்பதாம்.

வேதங்களிலே கூறப்படும் ஆடு சிவாகமத்திலே தெரிவுறுத்தப்பெறும் பசுவாம் என்றும், இங்கே ஆட்டை வெட்டி என்றது சிவஞானாப்பியாசத்தாலே ஆன்மாவின் பிறவியை அறுத்தலாம் என்றும்

ஆட்டு மாம்சத்தை உண்ணுதலாவது பிறவிக்கேதுவாகிய தற்போதம் என்னப்படும் பசுபோதத்தை மேலே எழவொட்டாது சிவஞான முகிழ்ப்பானே அடக்கிவிடுதலாம் என்றும் செம்பொருள் புலப்படுதல் காண்க.

இவ்வுண்மைப்பொருளை நோக்குமிடத்து ஆன்மாவின் றன்மையும், அதற்காகச் செயற்பாலனவும், செய்தாற் பெறுங் கதியும் ஒருவாறு அறிஞர்க்குத் தெளிவாகும். ஆகவே லௌகிக சம்பந்தம் பெறுங் கெடுதியை யுண்டாக்கி ஆன்மலாபத்தைத் தடுத்து அருநரகத்தை ஆட்சியாக அவ்வான்மாவுக்குக் கொடுக்கும் என்பது நிதர்சனமாம்.

உலகத்திலே விரும்பும் பொருட்கள் பலவாய் விரியினும் ஆன்றோர் சுருக்கி விளக்கியிருக்கின்றார்கள். உலகவேடணை; உலகமே நமது சாஸ்வதமான இடம் என்றும், அதிலுள்ள மாடு கன்று காணி வீடு முதலியவைகள் நம்முடையவைகளென்றும் செல்லும் பிராந்தி. இரண்டாவது அர்த்தவேடணை; பொருளே பெரிதென்றும் பொருளினாலே செய்த ஆபரணங்களே அலங்கரிப்பன என்றும் பொன்னைத் திரட்டியுருட்டி "பூனை பவ்வி" ஒழித்தெனக்காக்கும் சுசட்டு அறிவுடைமை, மூன்றாவது புத்ரவேடணை; புத்திரனே நம்மைக் கரையேற்றும் புகழும் வலியும் அமைந்தோன் என்று செல்லும் பற்று. ஈஷணா என்னும் வடமொழி ஏடணை என்றாயிற்று.

நாம் முன்னே எத்தனையோ ஜன்மங்களை எடுத்து எடுத்து எய்த்து இளைத்து மூர்ச்சித்து வருந்துந் தருணத்திலே கருணாநிதியாகிய சிவபெருமான் சிறிது திருக்கடைக் கணோக்கஞ் செய்தருளினார். அஃதாவது விஷத்தினாலே யாதுமுணராது மயக்கமுற்றானொருவனை மாந்திரீகன் கருடபாவனையினாலே நீக்கி அறிவுவரச்செய்து உய்விக்குமாறுபோலச் சிவபெருமானார் மாயாசம்பந்தமுடைய ஆன்மாக்களை இதனிடத்தினின்றும் நீக்கிக்காக்கவேண்டி அருட்சத்தியை அதிட்டித்து நின்று, கர்மம் சாபேக்ஷ நிலைநாடித் தேகங்களைக் கொடுத்தருளினார். அத்தேகங்களுள்ளே அறிவுடைய மானுஷ்ய தேகமே விழுப்பமுடையதாயிற்று. ஆதலினாலே தான் மானுஷ்ய ஜன்மம் உத்கிருஷ்ட முடையதென்று மேலோர் வகுத்தனர். (உத்கிருஷ்டம் உயர்வு)

இதனாலே என்ன, நன்றாக ஸ்நானம் பண்ணினோம், கடவுளைப் பிரார்த்தித்தோம். இனி என்னசெய்வது என்று ஆலோசித்தாலோ? நமக்குச் சொந்தமும் நிந்தமும் எவை? இன்னுஞ் செயற்பாலன யாவை? என்றற்றொடக்கத்த இவைகளைச் சிந்திக்கவேண்டிவரும். செய்யவேண்டியவை இறைவாநுக்கிரஹ பாத்யதையான சற்கருமங்கள். இக்கருமங்களைச் செய்யவொட்டாது மாயாசத்தி கெடுக்கும்.

அம்மாயாசத்தியை அச்சமின்றிநீக்கவல்லது அறிவாகிய மெய்ச்சத்தியேயாம். அறிவு உதயமானவுடன் ஆநந்தஸ்வரூப சிவம் இனிது விகஸிக்கும். சுடலை ஞானம் பெற்றுக் கடவுளையடைய முடியாது. ஆதலினாலே என்றும் உள்ளது சத் என்றும் வேதாகம உபநிஷத உபபிருங்கணாதிகள் உத்கோஷிக்கும் பரமசிவ பரம்பொருளைத் திரிகரணங்களினாலேயும் வழிபட்டு, ஆசையாகிய மாசையொழித்தலே முறையாகும். மனசு இச்சையுடையது; அவ்விச்சை அவிச்சையேயாம். ஆன்மாவுடன் நமது வீடு வருமா? நமது பெண்டீர்வருவாளா? நமது உடுதுணிவருமா? நமது கை வருமா? பிறிதான இனியபொருட்கள் யாதும் வருமா? இறக்கும்போது இவை யொன்றும் வராவன்றோ! அன்பீர்! "காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே" ஆ! இவ்விதமான வாக்குக்களை அறியாமையினாலே தெரியாத்தனமுடையவர்களைச்சேர்ந்து தெரியாத்தினத்து என்செய்வோம்! என்ன துணையாகும்? ஒன்றுந்துணையாகாவன்றோ! பின்னை நன்னேயத்தை எங்கே வைக்கவேண்டும்? வெளிப்பெட்டியிலன்று! ஹிர்தயமாகிய உட்பெட்டியிலுள்ள நன்மணியிடத்திலே நமதுமனஞ் செல்லல்வேண்டும். இன்பநெறிக்கெல்லாம் மேலான இன்பநெறி காட்டுவது அப்பெரும்பரம் பொருளிடத்து அமைந்த கருணையாகும். இவைகளைப் பத்திய ரூபமாகவே அடியார்கள் அநுபூதியிற்கண்டு தெளிந்து மகிழ்ந்து அருளிச்செய்தார்கள்.

அடியாருறவு நின்பூசை நேசமுமன்பு மன்றிப்
படிமீதில் வேறுபயனுளதோ பங்கயன் வகுத்த
குடியான சுற்றமுந் வாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே.

என்று பட்டினத்தடிகளும்,

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினுந்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன்றன் னடைந்தார்க் கிடைமருதுாரனே.

என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளிச்செய்தார்கள். இவைமாத்திரமா?

குசேலோபாக்கியானத்தும்,

சாருறு தந்தையாருந் தாயரு மனந்தஞ் சன்ம, வூருமோ ரனந்தம் வாய்த்த வுறவுமோ ரனந்தம் பெற்ற, பேருமோ ரனந்தங் கன்மப் பெருக்கமு மனந்தங்கொண்ட, சீருமோரனந்த மின்னுஞ் சேர்வதுமனந்தமாமால்.

என்று கூறப்பெற்றதுங் காண்க.

## திரட்டுரை.

இதுவரையுஞ் சுருக்கி எழுதப் பெற்றவைகளானே இவ்வுலகத்துப் பொருட்களினும், மனை, புத்திராதியோர்களினும், மனதைச் செலுத்தாது மனோசங்கற்பத்தில் இவைகளைக் கனாப்போல நினைந்து ஒதுக்கிவிட்டு, நிலையான பொருளாய கடவுளிடத்தும் மெய்யடியாரிடத்தும் சத்கதா காலக்ஷேப, மஹோபந்யாச, புராண சிரவணாதிகளிடத்தும் மனதைச் செலுத்தியும் நமது வாணாளைக் கழித்தல்வேண்டும் என்பதாம். ஏன் அங்ஙனஞ் செய்யவேண்டுமென்றால் "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணியபாவமுமே" ஆதலினென்க. குரு வாழ்க.

முத்தாந்தவீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்தவீதிவருந் தேவே பராபரமே.

இங்ஙனம்,

**வ. மு. இரத்திநேசுவரையர்,**

தமிழ்ப்பண்டிதர்.